கால்நடை பராமரிப்பு,
பால்வளம் மற்றும் மீன்வளத்துறை

# மீன்வளம்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2018–2019

### மானியக் கோரிக்கை எண். 7


## D. ஜெயக்குமார்

மீன்வளம், பணியாளர் மற்றும்
நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2018

"வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், புரதச் சத்துள்ள உணவை பொதுமக்களுக்கு அளிப்பதிலும், மீனவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதிலும், வருவாயைப் பெருக்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கும் மீன்பிடித் தொழிலை பெருக்கும் வகையில், புதிய மீன்பிடி துறைமுகங்கள் அமைத்தல், மீன் இறங்குதளங்கள் அமைத்தல், கடலோர நகரங்களில் மீன்பதனிடும் பூங்காக்கள் அமைத்தல், உள்நாட்டு மீன்வளத்தை அதிகரித்தல், மீன் விற்பனையை ஊக்குவித்தல் மற்றும் சந்தையை நவீனப்படுத்துதல் ஆகியவற்றை மேம்படுத்துவதிலும், மீனவர் நலத்திட்டங்களை, செயல்படுத்துவதிலும் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது."

**மாண்புமிகு முதலமைச்சர்**
**செல்வி ஜெ ஜெயலலிதா**

"மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடு நடைபெறும் நல்லாட்சியில் மீனவரின் வாழ்க்கையை மேலும் மேம்படுத்தும் வகையில் பல்வேறு நலத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது."

**மாண்புமிகு முதலமைச்சர்**
**திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை**

# பொருளடக்கம்


| வ. எண். | தலைப்பு | பக்கம் |
| --- | --- | --- |
| 1 | முன்னுரை | 1 |
| 2 | மீன்வளக் கொள்கைகளும் அதன் தொலைநோக்கு பார்வையும் | 4 |
| 3 | நிர்வாக அமைப்பு | 6 |
| 4 | தமிழ்நாட்டின் மீன்வளம் – ஒரு கண்ணோட்டம் | 10 |
| 5 | துறையின் முக்கிய செயல்பாடுகள் | 16 |
| 6 | தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் (வரையறுக்கப்பட்டது) (TAFCOFED) | 76 |
| 7 | தமிழ்நாடு மீனவர் நல வாரியம் (TNFWB) | 83 |
| 8 | தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் (வரையறுக்கப்பட்டது) (TNFDC Ltd.) | 87 |
| 9 | தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் (TNJFU) | 94 |
| 10 | 2017–18 ஆம் ஆண்டில் மீன்வளத்துறையின் முக்கிய சாதனைகள் | 109 |
| 11 | 2018–19 ஆம் ஆண்டு மொத்த நிதி ஒதுக்கீடு | 117 |
| 12 | இலக்கினை அடைவதற்கான வழிமுறைகள் | 117 |
| 13 | நிறைவுரை | 119 |

**மீன்வளத்துறை**

**கொள்கை விளக்கக் குறிப்பு**

**2018-19**

## 1. முன்னுரை

தமிழ்நாடு அரசு பல்வேறு புதுமையான மீன்வளத்திட்டங்களை செயல்படுத்துவதில் முன்னோடியாகத் திகழ்கிறது. தமிழ்நாடு, மீன்பிடிப்பதற்கும் மீன் வளர்ப்பதற்கும் தேவையான செறிந்த கடல், உவர்நீர் மற்றும் உள்நாட்டு மீன்வள ஆதாரங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மீன்வள ஆதாரங்களின் சமூக பொருளாதார பரிமாணங்களின் மீது போதுமான கவனம் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. முன்னாளைய சென்னை மாகாணத்தால் 1897 ல் இயற்றப்பட்ட இந்திய மீன்வளச் சட்டம், இந்தியா முழுமைக்கும் மீன்வள சட்டங்கள் உருவாக வழியமைத்தது. மீன்வளப்பிரிவு, மீனவர்களுக்கு வாழ்வாதாரம் வழங்குதல், மீன்வளம் சார்ந்த துறைகளில் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் உணவுப் பாதுகாப்பு வழங்குவதன் மூலம் நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றுகிறது. மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட தமிழ்நாட்டின் முன்னாள்

முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் மேற்கொள்ளப்பட்ட நிலைப்பாடுகளில் தமிழ்நாடு அரசு உறுதியாக உள்ளது. மேலும் தமிழ்நாடு அரசு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை பாதுகாப்பதில் உறுதியாக உள்ளது. பாக் வளைகுடா பகுதிகளில் நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை தடுத்திடும் நோக்கில் இலங்கை கடற்படையினர் தொடர் அத்துமீறல்களில் ஈடுபட்ட போதிலும் நமது மீனவர்கள் தங்களது வாழ்வாதாரத்தினை அமைதியான முறையில் ஈட்டிட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது.

கடந்த 2016–17 ஆம் ஆண்டில் நமது நாட்டின் மொத்த மீன் உற்பத்தி 11.41 மில்லியன் மெட்ரிக் டன்கள் ஆகும். இந்தியா, உலகிலேயே மொத்த மீன் உற்பத்தியில் இரண்டாவது இடமும் உள்நாட்டு மீன் உற்பத்தியில் இரண்டாவது இடமும் வகிக்கின்றது. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் மீன்வளம் ஒரு விழுக்காடு பங்கினை அளிக்கிறது. கடந்த 2017–18 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் மொத்த மீன்கள் உற்பத்தி 7.12 இலட்சம் டன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு, நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் நான்காவது

இடத்தினை வகிப்பதுடன் **2016–17**ம் ஆண்டு **88,257** மெட்ரிக் டன்கள் கடல் பொருள்களை ஏற்றுமதி செய்து ரூ.**4341.78** கோடி அன்னியச் செலாவணி ஈட்டியுள்ளது.

தமிழ்நாட்டில் தனிமனித மீன் உணவு உட்கொள்ளும் அளவு சராசரியாக **9.83** கிலோ அளவில் உள்ளது. இது பரிந்துரைக்கப்படும் மீன் உணவுத் தேவையான **11.60** கிலோவிற்கு சற்று குறைவாகவே உள்ளது. அதிகரித்து வரும் மீன் உணவிற்கான தேவையினை ஈடு செய்திட மாநிலத்தில் உள்ள மீன்வள ஆதாரங்களிலிருந்து மீன் உற்பத்தியினை கணிசமான அளவிற்கு உயர்த்துவது இன்றியமையாததாகும். நமது மாநிலத்தின் கடல் மீன்வளம் ஏறத்தாழ முழுமையாக பிடிக்கப்பட்ட நிலையில் உள்நாட்டு மீன்வள ஆதாரங்கள் முழுமையாக பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளன. மேலும், நாட்டின் ஊரக பகுதிகளில், வேலைவாய்ப்பு வழங்குவதன் மூலம் வருவாய் ஈட்டிடும் தொழிலாக மீன்வளர்ப்பு உருவாகி வருகிறது. வேளாண்மையுடன் ஒருங்கிணைந்த மீன்வளர்ப்பினை மேற்கொள்வது, உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வாய்ப்பாக நிரூபிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு மீன் உற்பத்தியினை எதிர்வரும் ஆண்டுகளில் மூன்று மடங்காக அதிகரித்திட தமிழ்நாடு அரசு உறுதிபூண்டுள்ளது.

## 2. மீன்வளக் கொள்கைகளும் அதன் தொலைநோக்கு பார்வையும்

தமிழ்நாடு அரசின் மீன்வளக் கொள்கைகள் மீன் உற்பத்தியினைப் பெருக்குதல், மீனவர் மற்றும் மீன்வளர்ப்போரின் வருவாயினை பெருக்குதல் மற்றும் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல் போன்ற நோக்கங்களை உள்ளடக்கியதாகும்.

### 2.1 மீன்வளத்துறையின் தொலைநோக்கு பார்வை

“மீன்வள ஆதாரங்களை வளங்குன்றா வண்ணம் பேணுதல், பயன்படுத்துதல், மேலாண்மை செய்தல் மற்றும் பாதுகாப்பான மீன்பிடிப்பிற்கு வழிவகுத்தல் மூலம் தமிழ்நாட்டு மீனவர்களின் வளமை மற்றும் பாதுகாப்பினை உறுதிசெய்தல்’’

### 2.2 செயலாக்கம்

- மேம்பட்ட வாழ்வாதாரத்திற்கான வாய்ப்புகளுடனான பாதுகாப்பான சூழலினை மீனவர்களுக்கு உருவாக்குதல்
- மீனவர் நலன் மற்றும் மேம்பாட்டிற்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் மீனவர்களுக்கு தரமான வாழ்க்கை மற்றும் சமூகப் பாதுகாப்பினை உறுதிசெய்தல்

- மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலை நாட்டுதல்
- உலகத்தரம் வாய்ந்த மீன்வள உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்
- மீன் மற்றும் மீன் உணவுப் பொருட்களின் தரத்தினை உயர்த்துவதற்குரிய வசதிகளை உருவாக்கி அவற்றின் மதிப்பினைக் கூட்டுதல்
- மீன்பிடிப்பிற்கு பிந்தைய மேலாண்மையில் மீனவர்களின் திறன் மேம்படுத்துதல்
- மீன்பிடித்தலை ஆழ்கடலுக்கு பரவலாக்குதல்
- பொதுமக்களுக்கு பாதுகாப்பான மற்றும் தரம் வாய்ந்த மீன் மற்றும் மீன் உணவுப் பொருட்களை நியாயமான விலையில் வழங்குதல்
- நிலைத்த மீன்வளத்திற்கான மீன்வளப் பாதுகாப்பு முறைகளை செயல்படுத்துதல்

**2.3 முக்கிய கொள்கைகள்**

1. தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டுதல் மற்றும் அவர்களின் நலன் பேணுதல்
2. நன்னீர், உவர்நீர் மற்றும் கடல் மீன்வள ஆதாரங்களின் மீன் உற்பத்தியினைப் பெருக்குதல்

3. திறன் மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப ஆதரவு, மனிதவள மேம்பாடு, ஆராய்ச்சி மற்றும் உருவாக்கம்

4. மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்கு தளங்கள் தொடர் குளிர்காப்பு மற்றும் மீன்பிடிப்பிற்கு முன் மற்றும் பின் தேவைப்படும் வணிகரீதியிலான நடவடிக்கைகளை இணைத்திடுவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

5. உள்நாட்டு மீன் தேவை மற்றும் உற்பத்திக்கிடையேயான இடைவெளியினைக் குறைத்தல்

6. மதிப்புமிக்க மீன்கள் மற்றும் மீன் உணவுப் பொருட்களை வெளிநாட்டில் சந்தைப்படுத்துதலுக்கான வாய்ப்பினை உருவாக்குதல்

7. மீன்வளர்ப்பு மூலம் ஊரக பகுதியில் கூடுதல் வேலை வாய்ப்பினை உருவாக்குதல்

8. உரிய சட்டம் மற்றும் விதிகளை அமலாக்கம் செய்வதன் மூலம் மீன்வள ஆதாரங்களைப் பேணுதல் மற்றும் மேம்படுத்துதல்

9. தமிழ்நாட்டின் மீன்வள ஆதாரங்களின் உற்பத்தித் திறனை மறு மதிப்பீடு செய்தல்


## 3. நிர்வாக அமைப்பு

மீன்துறை ஆணையர் / இயக்குநர், துறையின் தலைவராக உள்ளார். மேலும், மீன்துறை ஆணையர் / இயக்குநர், தமிழக அரசு நிறுவனமான தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநராகவும், தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் உள்பட அனைத்து மீனவ கூட்டுறவு சங்கங்களின் நடைமுறை சார்ந்த பதிவாளராகவும் மற்றும் தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் உறுப்பினர் செயலராகவும் உள்ளார்.

மீன்வளத்துறையின் நிர்வாக அமைப்பு பின்வரும் படம் 1–ல் காட்டப்பட்டுள்ளது.

படம்:1

மீன்வளத்துறை – நிர்வாக அமைப்பு




மீன்வளத்துறையின் மொத்தப் பணியாளர்கள் எண்ணிக்கை 1,684 ஆகும், பதவி வாரியாக பணியிடங்களின் விவரம் அட்டவணை 1ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## அட்டவணை: 1
## பதவி வாரியாக பணியிடங்கள்

| வ.எண் | பதவியின் பெயர் | பணியிடங்கள் |
|---|---|---|
| 1. | கூடுதல் மீன்துறை இயக்குநர் | 04 |
| 2. | மீன்துறை இணை இயக்குநர் | 05 |

| | | |
|---|---|---|
| 3. | மீன்துறை துணை இயக்குநர் | 13 |
| 4. | நிதி ஆலோசகர் மற்றும் தலைமை கணக்கு அலுவலர் | 01 |
| 5. | மீன்துறை துணை இயக்குநர் (பணியாளர்) | 01 |
| 6. | மீன்துறை துணை இயக்குநர் (பொறியியல்) | 01 |
| 7. | மீன்துறை உதவி இயக்குநர் | 54 |
| 8. | நேர்முக உதவியாளர் | 12 |
| 9. | துணை பதிவாளர் | 01 |
| 10. | கணக்கு அலுவலர் | 01 |
| 11. | மீன்துறை ஆய்வாளர் | 165 |
| 12. | கூட்டுறவு சார் பதிவாளர் | 15 |
| 13. | கடல் முதல்வர் | 14 |
| 14. | மீன்துறை சார் ஆய்வாளர் | 84 |
| 15. | கூட்டுறவு முதுநிலை ஆய்வாளர் | 27 |
| 16. | மீன்வள உதவியாளர் | 168 |
| 17, | அமைச்சுப் பணி மற்றும் களப்பணியாளர்கள் | 1,018 |
| | **மொத்தம்** | **1,584** |

**பொறியியல் பிரிவு**

| **வ. எண்** | **பதவியின் பெயர்** | **ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள்** |
|---|---|---|
| 1. | தலைமைப்பொறியாளர் | 01 |
| 2. | செயற்பொறியாளர் | 06 |
| 3. | உதவி செயற்பொறியாளர் | 14 |
| 4. | உதவி பொறியாளர் | 13 |
| 5. | இளநிலை பொறியாளர் | 17 |
| 6. | முதுநிலை வரைவு அலுவலர் | 01 |

| | | |
|---|---|---|
| 7. | வரைவு அலுவலர் | 08 |
| 8. | இளநிலை வரைவு அலுவலர் | 04 |
| 9. | கோட்ட கணக்கு அலுவலர் | 04 |
| 10. | தொழில்நுட்ப உதவியாளர் | 23 |
| 11. | இதர பணியாளர்கள் | 09 |
| | **மொத்தம்** | **100** |

## 4. தமிழ்நாட்டின் மீன்வளம் ஒரு கண்ணோட்டம்

**1,076** கிமீ நீளமுள்ள கடற்கரையினையும், **41,412** சதுர கி.மீ கண்டத்திட்டையும், **1.9** இலட்சம் சதுர கி.மீ பிரத்யேக பொருளாதார மண்டலத்தையும் கொண்டுள்ள கடலோர மாநிலமான தமிழ்நாடு **4.97** இலட்சம் டன் கடல்மீன் உற்பத்தியினை அளிக்கிறது. இவை **5,893** மீன்பிடி விசைப்படகுகளையும் **38,779** நாட்டுப்படகுகளையும் கொண்டு மீன்பிடிப்பில் ஈடுபட்டுவரும் **10.07** இலட்சம் செயல்படும் மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு துணை நிற்கிறது. நீர்த்தேக்கங்கள், பெரிய பாசன குளங்கள், சிறிய பாசன குளங்கள், குறுகிய கால நீர்கொண்ட குளங்கள், குட்டைகள், ஆறுகள், கழிமுகங்கள் மற்றும் கைவிடப்பட்ட நீர்நிலைகள் போன்ற **3.83** இலட்சம் ஹெக்டேர் நீர்பரப்புள்ள உள்நாட்டு நீர்நிலைகளை தமிழ்நாடு கொண்டுள்ளது. உள்நாட்டு மீனவ மக்களின் எண்ணிக்கை **2.30** இலட்சம் ஆகும் **(2017–18ல்**

உள்ளபடி). உவர்நீர் பரப்பில் **56,000** ஹெக்டேர் மீன்பிடிப்பிற்காகவும், **6115.68** ஹெக்டேர் கடலோர நீர்வாழ் உயிரின உற்பத்தியில் குறிப்பாக இறால் வளர்ப்பிற்காகவும் உள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது.

## 4.1 கடல் மீன்வளம்

தமிழ்நாடு 13 கடலோர மாவட்டங்களை உள்ளடக்கி, 1,076 கி.மீ நீளமுள்ள, இந்தியாவிலேயே இரண்டாவது நீண்ட கடற்கரையைக் கொண்டுள்ளது. கடல் மீன்வளம் குறித்த கண்ணோட்டம் அட்டவணை 2ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை: 2**
**கடல் மீன்வளம் குறித்த புள்ளி விவரங்கள் 2017-18**

| | |
|---|---|
| கடற்கரை நீளம் | 1,076 கி. மீ. |
| பிரத்யேக பொருளாதார மண்டலம், (Exclusive Economic Zone (EEZ) | 1.9 இலட்சம் ச.கி.மீ |
| கண்டத்திட்டு (Continental shelf) | 41,412 ச. கி.மீ |
| கடலோர மாவட்டங்கள் | 13 |
| மீனவ கிராமங்கள் | 608 |
| கடலோர மீனவ மக்கட்தொகை | 10.07 இலட்சம் * |
| **பதிவு செய்யப்பட்ட மீன்பிடிக் கலன்கள் (இணையதளம் மூலம்) (20.05.2018)** | |
| 1. மீன்பிடி விசைப்படகுகள் | 5,893 |

| | |
|---|---|
| **2.** நாட்டுப்படகுகள் (இயந்திரம் பொருத்தப்பட்டவை மற்றும் இயந்திரம் பொருத்தப்படாதவை ) | 38,779 (32,879 + 5,900) |
| **உட்கட்டமைப்பு வசதிகள்** | |
| பெரிய மீன்பிடி துறைமுகங்கள் | 6 (சென்னை, தூத்துக்குடி, நாகப்பட்டினம், சின்னமுட்டம், குளச்சல் மற்றும் மு ட்டம்(PPP)) |
| கட்டுமானப் பணிகள் நடைபெற்று வரும் பெரிய மீன்பிடி துறைமுகங்கள் | 3 (தேங்காய்பட்டணம், பூம்புகார் மற்றும் மூக்கையூர்) |
| நடுத்தர மீன்பிடி துறைமுகங்கள் | 3 (பழையாறு, மல்லிப்பட்டினம் மற்றும் கடலூர்) |
| மீன் இறங்கு தளங்கள் / படகு அணையும் தளம் | 36 |
| மீன் இறங்கு மையங்கள் | 254 |
| கடல்மீன் உற்பத்தி (2017-18) (உத்தேச மதிப்பீடு) | 4.97 இலட்சம் டன் * |
| கடல்பொருள் ஏற்றுமதி (2017-18) | 88257 மெட்ரிக் டன்** (மதிப்பு ரூ.4341.78 கோடி ) |

ஆதாரம் :

* தமிழ்நாடு மீன்வளத்துறை புள்ளி விவரங்கள்

**கடல்பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையம்(MPEDA)

## 4.2 உள்நாட்டு மீன்வளம்

தமிழ்நாட்டில் உள்நாட்டு நீர்வள ஆதாரங்கள், பெரிய நீர்த்தேக்கங்கள், பெரிய/சிறிய பாசன குளங்கள், சிறிய ஏரிகள்

மற்றும் ஊரக செயல்முறை மீன்வளர்ப்பு குளங்கள் ஆகியவற்றை கொண்டுள்ளது. மாநிலத்திலுள்ள உள்நாட்டு மீன்வள பிரிவின் விவரங்கள் அட்டவணை 3–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை: 3**

**உள்நாட்டு மீன்வள புள்ளி விவரங்கள்–2017-18**

| | |
|---|---|
| உள்நாட்டு மீன்வள ஆதாரங்கள் | 3.83 இலட்சம் ஹெக்டேர் |
| நீர்த்தேக்கங்கள் (78 எண்ணிக்கை*) | 62,015 ஹெக்டேர் |
| பெரிய மற்றும் குறுகிய கால பாசன குளங்கள் | 2,65,819 ஹெக்டேர் |
| உவர்நீர் பரப்பளவு | 56,000 ஹெக்டேர் |
| உள்நாட்டு மீனவ மக்கட்தொகை | 2.30 இலட்சம் |
| உள்நாட்டு மீன்வள கட்டமைப்புகள் | |
| **மீன்குஞ்சு உற்பத்தி மையங்கள்** | |
| i) அரசு மீன்பண்ணைகள் | 11 |
| ii) தனியார் மீன்பண்ணைகள் | 49 |
| **மீன்குஞ்சு வளர்ப்பு மையங்கள்** | |
| i) அரசு மீன்பண்ணைகள் | 42 |
| ii) தனியார் மீன்பண்ணைகள் | 180 |
| iii) கூண்டுகளில் மீன் குஞ்சு வளர்ப்பு (அரசு) | 3 |
| 2017-18 ஆம் ஆண்டு உள்நாட்டு மீன் உற்பத்தி (உத்தேச மதிப்பீடு) | **2.15** இலட்சம் டன் |

அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து நீலப்புரட்சி திட்டம், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம், சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டம் மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) போன்றவற்றிடமிருந்து நிதியுதவி பெற்று பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு அரசு மீன்பண்ணைகளின் வசதிகளை மேம்படுத்தியும், மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் புதியதாக உருவாக்கிட தனியார் மீன்வளர்ப்போரை ஊக்கப்படுத்தியும் வருகிறது.

உள்நாட்டு மீன்வள மேம்பாட்டிற்காக அரசு முழு கவனம் செலுத்தி உள்நாட்டு மீன்வள ஆதாரங்களை நீலபுரட்சி திட்டத்தின் கீழ் மேம்படுத்தி தற்போதுள்ள உள்நாட்டு மீன் உற்பத்தியினை மூன்று மடங்காக உயர்த்திடுவதைக் குறிக்கோளாக கொண்டுள்ளது.

## 4.3 நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் உவர்நீர் மீன்வளம்

தமிழ்நாட்டில், 56,000 ஹெக்டேர் உவர்நீர் பரப்பளவு மீன்பிடிப்பிற்காகவும் மற்றும் 6115.68 ஹெக்டேர் பரப்பளவு கடலோர நீர்வாழ் உயிரின உற்பத்திக்கும் குறிப்பாக இறால்கள் வளர்க்க பயன்படுவது மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில்

இறால் வளர்ப்புத் தொழில் போதுமான அளவில் வளர்ச்சி பெற்று, குறிப்பிட்ட நோய்கிருமிகளற்ற "வெனாமி" இறால்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, ஒரு பெரிய பொருளாதார செயல்பாடாக உருவெடுத்துள்ளது. இதுவரை 1,859 இறால் பண்ணைகள் (3,712.02 ஹெக்டேர்) மற்றும் **63** இறால் குஞ்சு பொரிப்பகங்கள், கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் நீர்வாழ் உயிரின பூங்காக்கள் அமைத்திட பொருத்தமான உபயோகப்படுத்தப்படாத கடலோர தரிசு நிலங்களை இனங்கண்டிட ஆய்வு மேற்கொள்ள அரசு கருதியுள்ளது.

**அட்டவணை :4**

**மாவட்ட வாரியாக கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் பதிவினைப் பெற்ற இறால் பண்ணைகள் மற்றும் பொரிப்பகங்கள்**

| வ. எண் | மாவட்டம் | பதிவு செய்யப்பட்ட இறால் பண்ணைகள் | | இறால் குஞ்சு பொரிப்பகம் |
|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | நீர் பரப்பு (ஹெக்.) | எண்ணிக்கை |
| 1 | திருவள்ளூர் | 97 | 217.96 | - |
| 2 | காஞ்சிபுரம் | 73 | 94.97 | 24 |
| 3 | விழுப்புரம் | 79 | 108.10 | 33 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | கடலூர் | 130 | 227.94 | 1 |
| 5 | நாகப்பட்டினம் | 824 | 1,541.84 | 4 |
| 6 | திருவாரூர் | 154 | 394.45 | - |
| 7 | தஞ்சாவூர் | 300 | 615.26 | - |
| 8 | புதுக்கோட்டை | 57 | 121.15 | - |
| 9 | இராமநாதபுரம் | 123 | 298.65 | 1 |
| 10 | தூத்துக்குடி | 21 | 91.20 | - |
| 11 | கன்னியாகுமரி | 1 | 0.50 | - |
| | **மொத்தம்** | **1,859** | **3,712.02** | **63** |

## 5. துறையின் முக்கிய செயல்பாடுகள்

மீன்வளத்துறையின் முக்கிய செயல்பாடுகள் பின்வருமாறு

1. மீனவர் நலன் சார்ந்த நடவடிக்கைகள்
2. சட்டம் மற்றும் விதிகளை அமல்படுத்தி ஒழுங்குபடுத்துதல்
3. மீன்வள ஆதாரங்களை பாதுகாத்து மேலாண்மை செய்தல்
4. மீன் மற்றும் மீன் உணவுப் பொருள்களை சந்தைப்படுத்துதல்
5. மீட்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள்
6. மீனவர்களின் கடல் பாதுகாப்பு நடவடிக்கைகள்
7. மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாத்தல்

8. உள்நாட்டு மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பினை மேம்படுத்துதல்

9. உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி

10. மீனவர்களின் திறன் மேம்பாடு

11. விரிவாக்கப் பணிகள்

12. மீனவ கூட்டுறவு சங்கங்களின் மேலாண்மை

## 5.1 மீனவர் நலத்திட்டங்கள்

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் இவ்வரசு மாநிலத்திலுள்ள மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதில், எப்பொழுதுமே முன்னுரிமை அளித்து, பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. நலத்திட்டங்களின் பணப்பயன்கள் பயனாளிகளின் வங்கிக்கணக்கில் தேசிய மின்னணு பணப்பரிவர்த்தனை (NEFT) மூலம் நேரடியாக செலுத்தப்படுவதால் நலத்திட்டங்கள் வெளிப்படையான முறையில் குறுகிய காலத்திற்குள் பயனாளிகளை சென்றடைவதை அரசு உறுதி செய்கிறது. பல்வேறு கடல் மீனவர் நலத்திட்டங்கள் மூலமாக, ரூ.271.16 கோடி நிதியினை 2017–18 ஆம் ஆண்டில் அரசு வழங்கியுள்ளது.

**I. மாநில திட்டங்கள்**

### 5.1.1 மீன்பிடி தடைக்காலத்தில் கடல் மீனவ குடும்பங்களுக்கு நிவாரண உதவியாக ரூ.5,000/- வழங்குதல்

கடல் மீன்வளத்தைப் பேணிக்காத்திட, 2001 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் மீன்பிடி தடைக்காலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 2017 ஆம் ஆண்டு முதல் மீன்பிடி தடைக்காலம் 45 நாட்களிலிருந்து 61 நாட்களாக (கிழக்கு கடற்கரைப் பகுதியில் ஏப்ரல் 15 முதல் ஜுன் 14 வரையிலும், மேற்கு கடற்கரை பகுதியில் ஜுன் 1 முதல் ஜுலை 31 வரையிலும்) அதிகரிக்கப்பட்டுள்ளது. மீன்பிடிப்பு தடை செய்யப்பட்ட காலங்களில், மீன்பிடி படகுகளில் பணியாளர்களாகவும் / தினக்கூலிகளாகவும் தொழில் புரியும் மீனவர்கள், வருமானம் ஈட்டுவதற்கு வேறுவழியில்லாததால், அவர்களது குடும்பத்தினைப் பராமரிப்பதற்கு மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள்.

மீன்பிடி தடைக்காலத்தில் இன்னலுறும் கடல் மீனவ குடும்பங்களின் துயரினை களைந்திடும் விதமாக, ஒவ்வொரு மீனவ குடும்பத்திற்கும் ரூ.5,000/- மீன்பிடி தடைக்கால

நிவாரணமாக வழங்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது.

2017-18 ஆம் ஆண்டில், 13 கடலோர மாவட்டங்களைச் சார்ந்த 1,59,506 மீனவ குடும்பங்களுக்கு நிவாரணத் தொகையாக ரூ.79.75 கோடி தேசிய மின்னணு பணப் பரிமாற்றம் (NEFT) மூலம் பயனாளிகளின் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டது.

இத்திட்டம் 2018-19 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.1.2 மீன்பிடிப்பு குறைந்த காலத்தில் கடல் மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவித் தொகையாக ரூ.5,000/- வழங்குதல்.

மீன்பிடி குறைவு காலத்தில் துயருறும் கடலோர மாவட்ட மீனவ குடும்பங்களின் துயரினை களைந்திடும் விதமாக, ஒவ்வொரு மீனவ குடும்பத்திற்கும் ரூ.5,000/- சிறப்பு நிவாரணமாக வழங்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது.

2017-18 ஆம் ஆண்டிற்கு, கடல் மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவி வழங்கிடும்

பொருட்டு அரசால் ரூ.**82.50** கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதுவரை, 11 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,39,045 கடல் மீனவ குடும்பங்களுக்கு ரூ.69.52 கோடி ‘தேசிய மின்னணு பணப்பரிவர்த்தனை (NEFT)’ மூலம் பயனாளிகளின் வங்கிக்கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2018-19 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.1.3 கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

இத்திட்டம், மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்புடன் கடல் மீனவர்களுக்கு செயல்படுத்தப்படும் திட்ட வழிமுறைகளைப் பின்பற்றி மாநிலத் திட்டமாக மீனவ மகளிருக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2017-18 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை கூட்டத்தொடரில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பின்படி, தமிழ்நாடு கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிவாரண உதவித்தொகையை ரூ.2,700/- லிருந்து, ரூ.4,500/- ஆக உயர்த்தியும்,

அதற்கேற்றவாறு மாநில அரசின் பங்கினை உயர்த்தியும் அரசு ஆணை வழங்கியுள்ளது.

2017–18 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக 1,98,833 கடல் மீனவ மகளிர் பயன்பெற ரூ.59.65 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டு 1,98,783 பயனாளிகளுக்கு நிவாரணத் தொகையாக ரூ.59.63 கோடி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2018–19 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.1.4 மீனவர்களுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட உயர்வேக டீசல் எரியெண்ணெய் வழங்குதல்

தமிழ்நாடு மீன்வளத்துறையில் பதிவு செய்யப்பட்ட மீன்பிடி விசைப்படகுகளுக்கும் (ஆண்டொன்றுக்கு படகொன்றிற்கு 18,000 லிட்டர்) மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகுகளுக்கும் (ஆண்டொன்றுக்கு படகொன்றிற்கு 4,000 லிட்டர்) தமிழ்நாடு அரசு விற்பனை வரி விலக்களித்து அதிவேக டீசல் எரியெண்ணெய் வழங்கி வருகிறது.

### 5.1.5 பாரம்பரிய மீன்பிடி கலன்களுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட தொழிலக மண்ணெண்ணெய் மானிய விலையில் வழங்குதல்

தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில், மண்ணெண்ணெயில் இயங்கக்கூடிய இயந்திரம் பொருத்தப்பட்ட பாரம்பரிய மீன்பிடி கலன்களின் உரிமையாளர்களுக்கு, விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட மானிய விலையிலான தொழிலக மண்ணெண்ணெய் லிட்டர் ஒன்றிற்கு ரூ.25/–வீதம் (ஆண்டொன்றுக்கு படகொன்றிற்கு 3,400 லிட்டர்) வழங்கி வருகிறது.

### 5.1.6 பிற நாட்டினரால் சிறைபிடிக்கப்படும் மீனவர்களது குடும்பத்திற்கு தின உதவித் தொகை வழங்குதல்

கடலில் மீன்பிடிக்கும் போது அண்டை நாட்டினரால் சிறைபிடிக்கப்படும் மீனவர்களின் குடும்பத்தினருக்கு உதவிடும் வகையில், நாளொன்றுக்கு ரூ.250/- வீதம் தின உதவித் தொகையினை அரசு வழங்கி வருகிறது. தின உதவித் தொகையை உடனடியாக வழங்கிடும் வகையில், இத்திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2017-18 ஆம் ஆண்டில், 208 மீனவர்களின் குடும்பத்திற்கு ரூ.22.91 இலட்சம் நிவாரணமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

2018-19 ஆம் ஆண்டிலும், இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.1.7 காணாமல் போகும் மீனவர்களது குடும்பத்திற்கு தின உதவித் தொகை வழங்குதல்

கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்களது குடும்பத்திற்கு, தின உதவித்தொகையாக ரூ.250/– வீதம் (மாதமொன்றுக்கு ரூ.7,500/-) மாநில அரசு வழங்கி வருகிறது. 2017-18 ஆம் ஆண்டில், 128 மீனவர்களின் குடும்பத்திற்கு ரூ.25.08 இலட்சம் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

2018-19 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.1.8 இலங்கை மற்றும் பிற நாடுகளின் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் பலியாகும் மீனவரது குடும்பத்தினருக்கும் /காயமடையும் மீனவருக்கும் நிவாரணம் வழங்குதல்

கடலோர மாவட்டங்களிலுள்ள மீனவர்கள், தங்களது பாரம்பரிய மீன்பிடி பகுதியான பாக் வளைகுடா பகுதியில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருக்கும் நேரங்களில், இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்படுதல் /

துன்புறுத்தப்படுதல், சில சமயங்களில் துப்பாக்கிச் சூட்டிற்கும் இலக்காகின்றனர்.

இவ்வாறான நிகழ்வுகளின் காரணமாக மரணமடையும் மீனவரது குடும்பத்தினருக்கு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து கருணைத் தொகையாக ரூ.3 இலட்சம் வழங்கப்படுகிறது. துப்பாக்கிச் சூட்டில் பலியாகும் மீனவர், அவரது குடும்பத்தில் பொருளீட்டக் கூடிய ஒரே நபராக இருக்கும் பட்சத்தில், இந்த கருணைத் தொகை ரூ.5 இலட்சமாக வழங்கப்படுகிறது. மீனவர் பலத்த காயம் மற்றும் சிறு காயம் அடையும் போது கருணைத்தொகையாக முறையே ரூ.50,000/- மற்றும் ரூ.20,000/- வழங்கப்படுகிறது.

### 5.1.9 கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்கள் / துப்பாக்கிச் சூட்டில் இறக்கும் மீனவர்களின் பிள்ளைகளின் உயர்கல்வி செலவினங்களுக்காக தனிநிதி ஏற்படுத்துதல்

கடலில் மீன்பிடிக்கச் சென்று, காணாமல் போகும் மீனவர்கள் / இலங்கை கடற்படையினரால் சுடப்பட்டு இறக்க நேரிடும் மீனவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை, அன்றாட செலவினங்களை சமாளிக்கப் போதுமானதாக இல்லை என்பதாலும், அம்மீனவர்கள்

பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கி உள்ளதால், அவர்களின் பிள்ளைகளுக்கு கல்வி வழங்கவும், கல்வியைத் தொடரவும் தேவையான நிதி வசதியின்றி மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர். எனவே, அம்மீனவர்களின் பிள்ளைகள், தொடர்ந்து உயர் கல்வி கற்பதற்கான முழுச் செலவினத்தையும் மேற்கொள்ள, தமிழ்நாடு மீனவர் நலவாரியம் மூலம் ரூ.25 இலட்சம் பிரத்தியேக நிதி உருவாக்கப்பட்டுள்ளது.

2018-19 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.1.10 மீனவர்கள் புதிய சூரைமீன்பிடி தூண்டில் மற்றும் செவுள்வலை விசைப்படகுகளை வாங்கிட 50 விழுக்காடு மானியம் வழங்குதல்

அண்மை கடற்பகுதியில் மீன் வளத்தினை பாதுகாத்து நிலையான மீன்பிடிப்பினை உறுதி செய்திடவும், ஆழ்கடல் பகுதியில் உள்ள பிடிக்கப்படாத சூரை மற்றும் இதர மீன்வளத்தினை மீனவர்கள் முறையாக பயன்படுத்திட உதவிடும் நோக்குடன், நவீன வசதிகளுடன் புதிய சூரை மீன்பிடி தூண்டில் மற்றும் செவுள்வலை மீன்பிடி படகுகளை கட்டுவதற்கு 50 விழுக்காடு மானியம் வழங்க புதிய

திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நாட்டிலேயே முதன்முறையாக அறிவித்தார்கள்.

இத்திட்டத்தில் படகு கட்டுவதற்கான உத்தேச மதிப்பான ரூ.60 இலட்சத்தில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் மானியம் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் 171 விண்ணப்பதாரர்களுக்கு புதிய சூரை மீன்பிடி படகு கட்டுவதற்கு பணி ஆணைகள் வழங்கப்பட்டு அதில் 47 பயனாளிகளால் படகு கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.10.07 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

## II. மத்திய அரசு பங்களிப்பு திட்டங்கள்

### 5.1.11 கடல் மீனவர்களுக்கான தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

2017-18 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை கூட்டத்தொடரில் அறிவிக்கப்பட்டபடி, தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிவாரண உதவித்தொகையான ரூ.2,700/-ஐ, ரூ.4,500/- ஆக உயர்த்தியும் அதற்கேற்றவாறு மாநில அரசின் பங்குத்தொகையினை உயர்த்தியும் அரசு ஆணை வழங்கியது.

**2017–18** ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக **2,08,115** கடல் மீனவர்கள் பயன்பெற ரூ.**62.43** கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டு **2,07,534** பயனாளிகளுக்கு நிவாரணத் தொகையாக ரூ.**62.26** கோடி வழங்கப்பட்டுள்ளது.

**2018–19** ஆம் ஆண்டிலும் இத்திட்டம், தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.1.12 மீனவர் குழு விபத்துக் காப்புறுதி திட்டம்

இது மத்திய அரசு பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும். மத்திய அரசு, பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா (PMSBY) என்ற திட்டத்தின் கீழ் விபத்தில் மரணம் அடையும்/ காணாமல் போகும் / நிரந்தர/ பகுதி ஊனம் அடையும் மீனவர்களுக்கு காப்புறுதியினை தேசிய மீனவர் கூட்டுறவு இணையம் (National Federation of Fishers Cooperatives Ltd) மூலம் வழங்குகிறது. இதற்கான சந்தா தொகையான ரூ.**12.00** மத்திய மற்றும் மாநில அரசுகளால் சரிவிகிதமாக செலுத்தப்படுகிறது. மீனவர்களிடமிருந்து சந்தா தொகை ஏதும் வசூலிக்கப்படுவதில்லை. விபத்தில் மரணம் அடையும்/ காணாமல் போகும்/ நிரந்தர ஊனம் அடையும் நேர்வுகளில்,

மீனவருக்கு காப்புறுதித் தொகையாக ரூ.2,00,000/- வழங்கப்படும். மேலும், பகுதி ஊனமடையும் நிகழ்வுகளில் காப்புறுதித் தொகையாக ரூ.1,00,000/- வழங்கப்படுவதோடு மருத்துவ செலவினை ஈடுசெய்திட, ரூ.10,000/- வழங்கப்படும். **2017–18** ஆம் ஆண்டில், **136** காப்புறுதி கோரிக்கைகளுக்கு ரூ.**2.505** கோடி காப்புறுதி தொகை வழங்கப்பட்டுள்ளது.

முழுநேர கடல் மற்றும் உள்நாட்டு மீனவர் மற்றும் தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தில் உறுப்பினராகவுள்ள மீன்பிடி உபதொழில் புரிவோர்கள் ஆக மொத்தம் 5,57,483 மீனவர்களுக்கு கூடுதல் காப்புறுதி சந்தா தொகை ரூ.**33.45** இலட்சம் (மாநில அரசின் பங்காக) புதுடில்லி, தேசிய மீனவர் கூட்டுறவு இணையத்திற்கு (FISHCOPFED-National Federation of Fishermen's Co-operatives Ltd) செலுத்தப்பட்டு **31.05.2019** முடிய காப்புறுதி காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இது மத்திய அரசு பங்களிப்புடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும் திட்டமாகும்.

### 5.1.13 பாரம்பரிய மீன்பிடிக்கலன்களை இயந்திரமயமாக்குதல்

மீனவர்கள் தங்களது பாரம்பரிய மீன்பிடி கலன்களில் பொருத்துவதற்கான வெளிப்பொருத்தும் இயந்திரம்/ உட்பொருத்தும் இயந்திரம் வாங்குவதற்கு நீலப் புரட்சித் திட்டத்தின் கீழ் அரசு மானிய உதவி அளித்து வருகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்திட மத்திய அரசால் 2017–18ஆம் ஆண்டிற்கு தமிழ்நாட்டிற்கு நிதி ஏதும் ஒப்பளிக்கப்படவில்லை.

இது மத்திய அரசு பங்களிப்புடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும் திட்டமாகும்.

### 5.1.14 பாக் வளைகுடா மாவட்டங்களில் இழுவலை படகுகளை ஆழ்கடல் மீன்பிடி படகுகளாக மாற்றுவதற்கு மானியம் வழங்குதல்

தமிழக மீனவர்கள் தங்களது பாரம்பரிய பகுதிகளில் மீன்பிடிக்கும்போது இலங்கை கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்படுவதால் பாக் வளைகுடா பகுதியில் இழுவைப்படகுகளைக் கொண்டு மீன்பிடித்தலானது அதிக கவனத்தை ஈர்த்து வருகிறது. மீனவர்களையும், மீன்பிடி படகுகளையும் இலங்கை அரசு நீண்டகாலம் சிறை வைப்பது, ஒட்டுமொத்த தமிழக மீனவ சமூகத்தினரிடையே கவலை

மற்றும் பாதுகாப்பற்ற உணர்வை ஏற்படுத்தியுள்ளது. இப்பிரச்சனைகளிலிருந்து மீளும் பொருட்டு, பாக் வளைகுடா பகுதியில் உள்ள இழுவைப்படகுகளுக்கு மாற்றாக ஆழ்கடல் சூரை மீன்பிடி படகுகளை கட்டுவதற்கு, அதன் விலையில் 70 விழுக்காடு மானிய உதவி வழங்கப்படுகிறது.

ஒரு படகின் விலையான ரூ.80 இலட்சத்தில் 50 விழுக்காடு மத்திய அரசின் மானியமாகவும், 20 விழுக்காடு தமிழ்நாடு அரசின் மானியமாகவும், 10 விழுக்காடு பயனாளியின் பங்களிப்பாகவும் மீதமுள்ள 20 விழுக்காடு தொகை வங்கி கடனாகவும் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 500 படகுகளை ஆழ்கடல் மீன்பிடி படகுகளாக மாற்றுவதற்கு ரூ.286 கோடியில் (மத்திய அரசு – ரூ.200 கோடி +மாநில அரசு ரூ.86 கோடி) செயல்படுத்திட அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் 27.07.2017 அன்று இராமேசுவரத்தில் இத்திட்டத்தினை துவக்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் கீழ் ஆழ்கடல் மீன்பிடி படகு கட்டுவதற்கு 18 படகு கட்டும் தளங்கள் மற்றும் 8 படகுக்கான பாகங்களை வழங்கும் நிறுவனங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

360 பயனாளிகளுக்கு பணி ஆணைகள் வழங்கப்பட்டு படகுகள் கட்ட 45 பயனாளிகள், கொச்சி கப்பல்கட்டும் தளம் 16 படகுகளையும், நாகப்பட்டினம் ''உமா கப்பல் கட்டும் மற்றும் பழுது பார்க்கும் நிறுவனம்'' 10 படகுகளையும், கொச்சியிலுள்ள ''மாஸ்டர் கப்பல் கட்டும் நிறுவனம்'' 7 படகுகளையும் மற்றும் காஞ்சிபுரத்திலுள்ள ''லாக்கீட் என்ஜீனியரிங் நிறுவனம்'' 12 படகுகளையும் கட்டுமானத்திற்கு எடுத்துக்கொள்ள முத்தரப்பு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

## 5.2 ஒழுங்குபடுத்துதல் மற்றும் அமலாக்கம் செய்தல்

### 5.2.1 மீன்பிடி கலன்களை இணைய தளம் மூலம் பதிவு செய்தல்

கடல் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு, மீன்பிடி கலன்களை இணையதளம் மூலம் பதிவு செய்யும் திட்டத்தை அறிமுகம் செய்து, ரூ.1.33 கோடி செலவில் இத்திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 20.05.2018 வரை, 5,893 மீன்பிடி விசைப்படகுகள், 32,879 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகள் மற்றும் 5,900 இயந்திரம் பொருத்தப்படாத நாட்டுப்படகுகள் இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 5.2.2 கடல் மீனவர்களுக்கு "பயோமெட்ரிக்" (Bio-Metric Identity Card) அடையாளஅட்டை வழங்குதல்

மும்பையில் 26.11.2008 அன்று நடந்த தீவிரவாத தாக்குதலுக்குப் பின்னர், கடலோரப் பாதுகாப்பினை உறுதி செய்திடும் பொருட்டு, கடல் மீனவர்களுக்கு "பயோமெட்ரிக்" (Bio-Metric Identity Card) அடையாள அட்டைகளை வழங்கிடும் திட்டம், மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, இதற்கென தமிழகத்திற்கு ரூ.1.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 1,86,512 கடல் மீனவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

### 5.2.3 கடல் மீனவ மகளிருக்கு "பயோமெட்ரிக்" (Bio-Metric Identity Card) அடையாளஅட்டை வழங்குதல்.

மீனவ மகளிருக்கும் 'பயோமெட்ரிக்' அடையாள அட்டைகள் வழங்க அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு இத்திட்டத்தின் கீழ் **1,62,262** 'பயோமெட்ரிக்' அடையாள அட்டைகள் மீனவ மகளிருக்கு வழங்கப்பட்டுள்ளன.

## 5.3 மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை செய்தல்.

மீன்வளத்தினைப் பாதுகாத்து அதிகரித்திட, மீன்பிடி தடைக்காலம் அமலாக்கம் செய்தல், கடலில் மீன்குஞ்சுகளை இருப்பு செய்தல், செயற்கை மீன் உறைவிடங்களை அமைத்தல் மற்றும் பல்வகை மாற்று மீன்பிடி முறைகளை மேற்கொள்ளுதல் போன்ற வழிமுறைகள் மீன்வளத்துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 5.3.1 ஒரே சீரான மீன்பிடி தடைக்காலம்

கடல் மீன்வளத்தைப் பேணிக்காத்திட, **2001** ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் மீன்பிடி தடைக்காலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 2017 ஆம் ஆண்டு முதல் மீன்பிடி தடைக்காலம் **45** நாட்களிலிருந்து 61 நாட்களாக (கிழக்கு கடற்கரைப் பகுதியில் ஏப்ரல் 15 முதல் ஜுன் 14 வரையிலும், மேற்கு கடற்கரை பகுதியில் ஜுன் 1 முதல் ஜுலை **31** வரையிலும்) அதிகரிக்கப்பட்டுள்ளது.

## 5.4 மீன் உணவு பொருட்களை தயாரித்தல் மற்றும் விற்பனை செய்தல்

### 5.4.1 உள்நாட்டு மீன் விற்பனையை மேம்படுத்துதல்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் உள்நாட்டில் தரமான மீன்களை, பொதுமக்களுக்கு குறைந்த விலையில் வழங்குவதற்கான சில்லறை விற்பனை நிலையங்கள், நடமாடும் மீன் விற்பனை நிலையங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தால் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உக்கடத்தில் மொத்த மீன்விற்பனை சந்தை நவீனமயமாக்கப்பட்டு உள்நாட்டு மீன் விற்பனை ஊக்குவிக்கப்படுகிறது. மேலும், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகமானது 2017–18 ஆம் ஆண்டில் ஒரு முன்னோடித்திட்டமாக இணையதளம் மூலம் மீன் விற்பனையை தொடங்கியுள்ளது. இதுபோன்ற முன்னோடித் திட்டங்கள் நடப்பாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.4.2 மீன்விற்பனை சந்தைகளை நவீனப்படுத்துதல்

சுகாதாரமான மற்றும் தரமான மீன்களை நுகர்வோருக்கு வழங்கிடவும் மற்றும் மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீன்களுக்கு நல்ல விலையினை பெற்றிட ஏதுவாக, தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் மற்றும் தமிழக அரசின் நிதியுதவியுடன் 19 மீன் விற்பனை சந்தைகள் புதிதாக

அமைக்கும் பணிகள் மற்றும் மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் மற்றும் தமிழக அரசு 19 மீன் விற்பனை சந்தைகளை நவீனப்படுத்த, முதற்கட்ட நிதி உதவியாக ரூ.294.75 இலட்சம் மற்றும் இரண்டாம் கட்ட நிதியுதவியாக ரூ.326.24 இலட்சத்தினையும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி / நகராட்சி அமைப்புகளுக்கு விடுவித்து மீன்விற்பனை அங்காடி புதிதாக அமைத்தல்/ நவீனப்படுத்தும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

**5.5 மீட்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள்**

**5.5.1 “ஒகி” புயலின் தாக்கத்தை தணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.**

கன்னியாகுமரி கடலோர பகுதியை கடந்த 30.11.2017 அன்று தாக்கிய “ஒகி” புயலினால் கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த ஆழ்கடலில் தங்கி மீன்பிடிப்பில் ஈடுபட்ட படகுகள் மிகுந்த சேதத்திற்குள்ளாகின. புயலினால் மீன்பிடி படகுகளுடன் காணாமல் போன மீனவர்களை கண்டுபிடிக்க இயலவில்லை.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியின் பயனாக **3,506** மீனவர்கள், அவர்களது **24** நாட்டுப் படகுகள் மற்றும் **264** மீன்பிடி விசைப்படகுகளுடன் மீட்கப்பட்டு பாதுகாப்பாக கரை சேர்ந்தனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் **12.12.2017** அன்று கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகை புரிந்து, "ஒகி" புயலினால் பாதிக்கப்பட்ட மீனவ மக்களுக்கு ஆறுதல் வழங்கியதோடு அம்மக்களுக்கு பல்வேறு நிவாரண உதவிகளை வழங்குவதற்கு ஆணையிட்டார்கள்.

"ஒகி" புயலினால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் பரிதாப நிலையினை கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு அரசு பல்வேறு மீட்பு மற்றும் மறுவாழ்வு திட்டங்களை செயல்படுத்தியது. பல்வேறு நிவாரண தொகுப்புகளின் கீழ் நிவாரண உதவிகளை வழங்கிட ரூ.**68.12** கோடி ஒப்பளித்துள்ளது. "ஒகி" புயலின்போது இறந்த **27** மீனவர்களின் குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.**5.40**கோடி வழங்கப்பட்டுள்ளது.

"ஒகி" புயலினால் காணாமல் போன மீனவர்களை இறந்தவர்களாக கருதி கருணை உதவித் தொகை

தலா ரூ.20 இலட்சம் வழங்கிட ஏதுவாக, வருவாய் நிருவாக ஆணையர் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்ட குழுவின் பரிந்துரையின் பேரில், காணாமல் போன கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த 139 மீனவர்கள், தூத்துக்குடி மாவட்டத்தைச் சார்ந்த 3 மீனவர்கள், நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சார்ந்த 15 மீனவர்கள், கடலூர் மாவட்டத்தைச் சார்ந்த 19 மீனவர்கள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த ஒரு மீனவர் ஆகியோர்களை இறந்தவர்களாக கருதிட சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களால் அறிவிக்கை வெளியிடப்பட்டது. மாவட்ட ஆட்சியர்களின் பரிந்துரையின்பேரில், 177 மீனவர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை உதவித் தொகையாக ரூ.35.40 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டு, காணாமல்போன 177 மீனவர்களின் வாரிசுதாரர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்அவர்களால் 14.03.2018 அன்று வழங்கப்பட்டது. இத்தொகை தலா ரூ.10 இலட்சம் வீதம் காசோலையாகவும், 6 மாத கால அவகாசத்தில் பெற்றிடும் வகையில் தலா ரூ.10 இலட்சம் வைப்பு நிதியாகவும் வழங்கப்பட்டது. ‘‘ஒகி’’ புயலினால் சேதமடைந்த மீன்பிடி படகுகளுக்கு நிவாரண உதவியாக ரூ.8.44 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

### 5.5.2 எண்ணெய் கசிவினால் பாதிக்கப்பட்ட திருவள்ளூர், சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சார்ந்த மீனவர்களுக்கு நிவாரண உதவி வழங்குதல்

**28.01.2017** அன்று எண்ணூர் காமராஜர் துறைமுகத்திற்கு அருகில் இரண்டு தனியார் கப்பல்கள் எதிர்பாராத விதமாக நேருக்கு நேர் மோதிக்கொண்டன. இவ்விபத்தினால் கப்பலிலிருந்து கச்சா எண்ணெய் கசிவு ஏற்பட்டு திருவள்ளூர், சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட கடற்பகுதியில் பரவியது. இம்மூன்று மாவட்டங்களில் மீனவர்கள் தங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு மிகுந்த சிரமத்திற்கு உள்ளானார்கள். மேலும், பாதிக்கப்பட்ட மூன்று மாவட்டங்களிலுள்ள மீனவர்கள் கடலுக்கு சென்று பிடித்து வந்த மீன்களை வாங்குவதற்கு எவரும் முன்வராததாலும், விலை சரிவாலும், மீனவர்களும் மீன்பிடிப்பு சார்ந்த தொழில் புரிவோரும் பாதிப்படைந்தனர்.

எண்ணெய் கசிவால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் துயரினை விரைந்து நீக்கிடும் வகையில் நிவாரணம் வழங்கிட கேட்டு மாண்புமிகு மத்திய கப்பல் போக்குவரத்து துறை

அமைச்சர் அவர்களை, புதுடில்லியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 28.2.2017 அன்று நேரில் சந்தித்து நிவாரணம் வழங்க கோரினார்கள். பாதிக்கப்பட்ட திருவள்ளூர், சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களின் துயரினை கருத்திற்கொண்டு, பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மீனவ குடும்பத்திற்கும் ரூ.5,000/– வீதம் 30,000 குடும்பங்களுக்கு மொத்தம் 15 கோடி ரூபாய் இடைக்கால நிவாரணமாக வழங்க அரசால் ஆணையிடப்பட்டு, நிவாரண உதவித்தொகை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 06.03.2017 அன்று வழங்கப்பட்டது.

மேலும், எண்ணெய் கசிவால் மாசு ஏற்படுத்திய நிறுவனங்களின்,பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியிலிருந்து (Corporate Social Responsibility Fund), சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் 2 மீன்விற்பனை சந்தைகள் கட்டுவதற்கு அரசால் ரூ.75 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீடாக ரூ.240.07 கோடி வழங்கிட கப்பல் நிறுவனங்களின் காப்புறுதி நிறுவனங்களை அரசு கேட்டுக்கொண்டது. கப்பல் நிறுவனங்களிடமிருந்து ரூ.131 கோடி பெறப்பட்டு திருவள்ளூர்,

சென்னை, மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சார்ந்த பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

## 5.6 கடல் பாதுகாப்பு மற்றும் தொலைதொடர்பிற்கான நடவடிக்கைகள்

மத்திய மாநில அரசு நிதி பங்களிப்பு திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக 1,600 மீன்பிடி விசைப்படகுகளுக்கு ஆபத்துக் கால எச்சரிக்கை கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. ஏனைய மீனவர்களுக்கு வருங்காலங்களில் வழங்கப்படும்.

ஆழ்கடல் மீன்பிடிப்பிற்கு செல்லும் மீனவர்களின் இருப்பிடத்தை அறியவும் மற்றும் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும், “டிரான்ஸ்பாண்டர்” (Transponders) கருவியினை இந்திய விண்வெளி ஆய்வு மையம் மேம்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மற்றும் சென்னை மாவட்டங்களிலுள்ள 26 மீன்பிடி விசைப் படகுகளுக்கு இந்தக் கருவி சோதனை அடிப்படையில் பொருத்தப்பட்டுள்ளது. செயற்கைக்கோள் உதவியுடன் இயங்கும் இக்கருவி, மீன்பிடி விசைப்படகுகளை கண்காணித்திடவும், ஆழ்கடலில் 200 கடல்மைல் தொலைவிற்குள் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள மீன்பிடி

விசைப்படகுகளுக்கு ஆபத்து காலங்களில் தேவையான உதவிகளை அளித்திட இயலும்.

உலக வங்கி நிதி உதவியுடன், "கடலோர பேரிடர் அபாயம் குறைப்புத் திட்டத்தின் (CDRRP)" கீழ் ரூ.62.14 கோடி செலவில் தமிழக கடலோர மாவட்டங்களில் உள்ள கடல் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் பொருட்டு அரசு கம்பியில்லா தொலை தொடர்பு வசதியினை ஏற்படுத்தி உள்ளது.

கடலில் மீன்பிடிப்பு மேற்கொள்ளும் மீனவர்களின் பாதுகாப்பினை தொடர்ந்து உறுதிப்படுத்தவும், வானிலை அறிக்கை மற்றும் மீன்வள ஆதார இடங்களைத் தொடர்ந்து தெரிந்து கொள்ளவும், பாரம்பரிய மீன்பிடி கலன்களுக்கு 15,004 எண்ணிக்கையில் மற்றும் மீன்பிடி விசைப்படகுகளுக்கு 2,535 எண்ணிக்கையில் கம்பியில்லா தொலைத்தொடர்பு கருவிகள் வழங்கப்பட்டு வருகிறது. கடற்கரை முழுவதும் தொடர் இணைப்புக்காகவும், தொலைத்தூர தொடர்புக்காகவும் 7 இடங்களில் புதிய தொலைதொடர்பு கோபுரங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் BSNL நிறுவனத்திற்கு சொந்தமான 7 கோபுரமும் மற்றும் காவல் துறைக்கு சொந்தமான 1 கோபுரமும் பயன்படுத்தப்படவுள்ளன.

24 மணி நேரமும் கண்காணிக்கக்கூடிய கட்டுப்பாட்டு அறைகள் 18 இடங்களில் ஏற்படுத்தப்பட்டு மீன்துறை இயக்குநரகத்தில் உள்ள மத்திய கட்டுப்பாட்டு அறையுடன் இணைந்து செயல்படும்.

## 5.7 தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பாதுகாத்தல்

### 5.7.1 கச்சத் தீவினை திரும்ப பெறுதல் – பிரச்சனைகள் மற்றும் தற்போதைய நிலைமை

கச்சத்தீவினை இந்தியாவிற்கு மீளப்பெறுதல் மற்றும் பாக் வளைகுடா பகுதியில் பாரம்பரிய மீன்பிடிப்பில் ஈடுபடும் தமிழக மீனவர்களின் உரிமையை நிலைநாட்டுதல் ஆகியவற்றை தமிழக அரசு முதன்மையான குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இவை தவிரவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தனிப்பட்ட முறையில் உச்சநீதிமன்றத்தில் கச்சத்தீவினை மீட்பது தொடர்பாக தொடரப்பட்ட வழக்கு எண் 561/2008 இல், தமிழக அரசின் வருவாய்துறையினை ஒரு வாதியாக இணைத்துக் கொள்ள உரிய பிரேரணை சமர்ப்பித்திட, கடந்த 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் தமிழக சட்டமன்ற கூட்டத்தொடரில் ஏகமனதாக தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இத்தீர்மானத்தின்படி, மேற்காணும்

வழக்கில், வருவாய்த்துறையினையும் வாதியாக இணைத்துக் கொள்ள, தமிழக வருவாய்த்துறையினரால் இணைப்பு பிரேரணை ஒன்று உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கச்சத்தீவை திரும்பப் பெற மத்திய அரசினை வலியுறுத்தி **03.05.2013** அன்று தமிழக சட்டமன்ற கூட்டத் தொடரில் தமிழக அரசு ஒரு தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றியது. மேலும், கச்சத்தீவினை திரும்பப் பெறவும், பாரம்பரிய மீன்பிடிப்பகுதிகளில் மீன்பிடிக்கும் உரிமையை இலங்கை அரசு தடுக்காமல் இருப்பதற்கும், தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு எடுக்க வேண்டும் என்று கடந்த **05–12–2014** அன்று தமிழக சட்டமன்ற கூட்டத்தில் தமிழக அரசால் மேலும் ஒரு தீர்மானம் ஏகமனதாக இயற்றப்பட்டுள்ளது.

### 5.7.2 மீனவர்கள் துன்புறுத்துதலை தடுக்கவும் மற்றும் கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் அவர்களது மீன்பிடி படகுகளை விடுவிக்கவும் அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

தமிழ்நாடு மீனவர்கள் தொன்றுதொட்டு பாரம்பரியமாக அனுபவித்து வரும் மீன்பிடி உரிமையை நிலைநாட்டி பாதுகாக்க தமிழ்நாடு அரசு உறுதியுடன்

செயல்பட்டு வருகிறது. இலங்கை கடற்படையால் தொடர்ந்து சிறைபிடித்தல், அவர்கள் மீது தாக்குதல்கள் நிகழ்த்துதல் மற்றும் துன்புறுத்துதல் போன்ற செயல்கள், அவர்களது வாழ்வுரிமை, வாழ்வாதாரம் மற்றும் பாக் வளைகுடாப் பகுதியில் பாரம்பரியமான மீன்பிடிப்பு பகுதியில் மீன்பிடிக்கும் உரிமைகளின் மீது அத்துமீறுவதாகவும் அமைந்துள்ளது.

தமிழ்நாட்டு மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினரின் தொடர் தாக்குதல் நிகழ்வுகள், துன்புறுத்துதல், சிறைபிடித்தல் மற்றும் நீண்ட நாட்களாக நமது அப்பாவி மீனவர்களை இலங்கை சிறையில் நிறுத்திவைத்தல் ஆகிய நிகழ்வுகளில் ஆழ்ந்த அக்கறை கொண்ட மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதுவரை, 124 கடிதங்கள் வாயிலாக இந்நிகழ்வுகளை மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார்கள்.

மேலும், மத்திய அரசு தனது அனைத்து விதமான இராஜாங்க ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொண்டு, கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை உடனடியாக விடுவித்திடுவதை உறுதி செய்யவும், மீண்டும் அத்தகைய நிகழ்வுகள் நடப்பதைத் தடுத்திடவும், தீர்க்கமான

நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்.

2017–18ஆம் ஆண்டில் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டு தாயகம் அழைத்து வரப்பட்டனர்.

மேலும், நாளது தேதி (20.05.2018) வரை இலங்கை அரசால் முடக்கிவைக்கப்பட்டுள்ள 168 படகுகளை விடுவித்திடவும் தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 5.7.3 மீனவர் அளவிலான பேச்சுவார்த்தை

பாக் வளைகுடா பகுதியில் மீன்பிடிப்பதில் ஏற்படும் பிரச்சனைகளை தீர்க்கும் பொருட்டு இந்திய மற்றும் இலங்கை மீனவர்களுக்கிடையேயான கலந்துரையாடலை மேற்கொள்வதென்றும், அவ்வமயம் இருதரப்பினரும் ஒப்புக்கொண்ட விடயங்களை மேல் நடவடிக்கைக்காக கூட்டுப் பணிக்குழு முன்பு வைப்பது எனவும் ஜனவரி 2012 ல் நடைபெற்ற அமைச்சகங்களுக்கிடையேயான கூட்டம் மற்றும்

நான்காவது கூட்டுப் பணிக்குழு கூட்டங்களில் கொள்கை அளவில் ஒப்புக்கொள்ளப்பட்டது. தமிழ்நாட்டு மீனவ சமுதாயத்தின் விருப்பம் மற்றும் உணர்வுகளை கருத்திற்கொண்டு, பாக் வளைகுடா பகுதியில் மீன்பிடிக்கும்போது ஒவ்வொரு நாளும் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண இலங்கை மீனவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திடவும், இருநாட்டு மீனவர் சமுதாயங்களுக்கிடையே நேரிடையாக கருத்துக்களை பரிமாறுவதற்கான அவசியத்தின் பொருட்டும், தமிழ்நாடு அரசால் மீனவர் மட்டத்திலான 4 சுற்று பேச்சுவார்த்தைகள் நடத்த வழிவகை செய்யப்பட்டது.

### 5.7.4 மீன்வளத்தின் மீதான இந்திய இலங்கை கூட்டுப் பணிக்குழு

இதுவரை 3 சுற்று இந்திய இலங்கை கூட்டுப் பணிக்குழு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இக்கூட்டங்களின் போது இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழ்நாடு மீனவர்களையும் முடக்கி வைக்கப்பட்டுள்ள அவர்களது மீன்பிடி படகுகளை மீன்பிடி உபகரணங்களோடு விடுவித்திட வலியுறுத்தப்பட்டது.

## 5.8 உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

அரசு பல்வேறு நிதி ஆதாரங்களின் உதவி பெற்று கடலோர உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. இந்த வசதிகள் மீன்களை சுகாதாரமான முறையில் கையாண்டு நுகர்வோருக்கு தரமான மீன்களை வழங்குவதை உறுதி செய்கிறது. இதன் மூலம் ஏற்றுமதி மதிப்பு உயர்வதோடு மீனவர்களுக்கு அதிக வருவாய் ஈட்டிட உதவுகிறது. உட்கட்டமைப்பு வசதிகள் பின்வருமாறு.

### 5.8.1. மீன்பிடி துறைமுகங்கள், மீன்இறங்குதளங்கள் மற்றும் முகத்துவாரங்களில் தூர்வாரும் பணிகள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற விதி எண் 110 ன்கீழ், தமிழ்நாட்டில் 6 இடங்களில் உள்ள முகத்துவாரங்களில் மீன்பிடி கலன்கள் எளிதாக சென்று வர ஏதுவாக தூர்வாரப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, கடலூர், பழையார் மற்றும் நாகப்பட்டினம் மீன்பிடி துறைமுகங்கள், திருமுல்லைவாசல் மற்றும் நாகூர் மீன்இறங்குதளங்கள், கடலூர் மாவட்டம் வெள்ளாறு ஆகிய 6 இடங்களிலுள்ள முகத்துவாரங்களில் ரூ.17.80 கோடி

மதிப்பீட்டில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ள அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. தூர்வாறும் பணிகள் நடைபெற்று வருகிறது.

### 5.8.2. திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடு ஏரி முகத்துவாரத்தில் கற்சுவர் அமைத்து நிரந்தரமாக நிலைப்படுத்துதல்.

திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடு முகத்துவாரத்தில் கற்சுவர் அமைத்து நிரந்தரமாக நிலைப்படுத்தும் பணிக்காக தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கை தயாரிப்பதற்கும் மாதிரி ஆய்வுகள் நடத்துவதற்கும் தமிழக அரசு ரூ.40 இலட்சம் நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒப்புதல் வழங்கியது. இந்திய தொழில்நுட்ப கழகம் மெட்ராஸ் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. ஆலோசகர் நியமிக்கப்பட்டு மாநில அளவிலான கடலோர ஒழுங்குமுறை மண்டல ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. சுற்றுச்சுழல் தாக்க ஆய்வறிக்கை (EIA) ஆலோசகரால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

### 5.8.3. சேத்துப்பட்டு பசுமைப் பூங்காவில் மீன்காட்சியகம் மற்றும் நீர்வாழ் உயிரின மெய்நிகர் காட்சியகம் அமைத்தல்

சென்னை பெருநகரத்தின் சேத்துப்பட்டு ஏரியில் மீன்வளத்துறையால் ஏற்படுத்தப்பட்ட விளையாட்டு தூண்டில் மீன்பிடிப்பு வசதிகளுடன் கூடிய பசுமைப் பூங்கா 27.02.2016 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இந்தப் பசுமைப் பூங்காவில் படகு குழாம், தூண்டில் மீன்பிடிப்பு, பன்னடுக்கு வாகன நிறுத்தகம், பொழுது போக்கு மையம், உணவகம், நடைபயிற்சிப்பாதை, சிறுவர்கள் விளையாட்டுப் பகுதி, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் போன்ற வசதிகள் ரூ.42 கோடி திட்ட மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தனித்துவம் வாய்ந்த பசுமைப் பூங்கா பார்வையாளர்களைக் கவரும் பொருட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற விதி எண்.110 ன் கீழ் மீன்காட்சியகம் மற்றும் நீர்வாழ் உயிரின மெய்நிகர் காட்சியகம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இத்தனித்துவம் வாய்ந்த வசதியானது தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழக அரசின் சமநிதி பங்கீட்டில் ரூ.600 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது. 2016–17 ஆம் நிதி ஆண்டில் தமிழக அரசு

ரூ.300 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டில் முழுமையாக கட்டி முடிக்கப்படும்.

### 5.8.4 தேங்காய்பட்டணம் மீன்பிடிதுறைமுகம் (மத்திய மாநில அரசுகளின் சமவிகித பங்களிப்பு திட்டம்)

கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்பட்டணம் கிராமத்தில் ரூ.97.40 கோடியில் மத்திய அரசின் பங்களிப்புத் திட்டத்தின் (50:50) கீழ் கட்டப்பட்டு வரும் மீன்பிடி துறைமுகம் முடிவுறும் தருவாயில் உள்ளது. 750 மீன்பிடி விசைப் படகுகள், 300 கண்ணாடி நாரிழைப் படகுகள் மற்றும் 400 நாட்டுப்படகுகள் தங்கிட படகு அணையும் தளம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் 13 ஆம் நிதிக்குழு பரிந்துரையின் அடிப்படையில் ரூ.82.73 கோடியில் தேங்காய்பட்டணம் மீன்பிடி துறைமுகத்தின் கிழக்கு கடற்கரை பகுதி கிராமங்களின் பாதுகாப்பிற்காக கடலரிப்பு தடுப்பு பணிகள் செய்வதற்கான நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது.

### 5.8.5 பூம்புகார் மீன்பிடித்துறைமுகம் (மத்திய மற்றும் மாநில அரசின் பங்களிப்பு திட்டம் 75:25 மற்றும் 50:50)

நாகப்பட்டினம் மாவட்டம் பூம்புகாரில் ஒரு மீன்பிடி துறைமுகம் ரூ.148.00 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் பங்களிப்புடன் கட்டப்பட்டு வருகிறது. தெற்கு பிரதான அலைதடுப்பு சுவர் 1100 மீட்டர் நீளத்திலும் வடக்கு அலைதடுப்பு சுவர் 390 மீட்டர் நீளத்திலும் மேலும் படகுஅணையும் தளம் கட்டுமானப் பணியும் நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் பணிகள் முழுமையாக முடிக்கப்படும்.

### 5.8.6 இராமநாதபுரம் மாவட்டம் மூக்கையூரில் மீன்பிடி துறைமுகம் கட்டுதல் (மத்திய மாநில அரசுகளின் சமவிகித பங்களிப்பு திட்டம்)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தொடர் முயற்சிகளின் பலனாக இராமநாதபுரம் மாவட்டம் மூக்கையூர் கிராமத்தில் ரூ.113.90 கோடியில் மத்திய மற்றும் மாநில அரசின் சமநிதி பங்கீட்டில் ஒரு மீன்பிடி துறைமுகம் அமைக்க மத்திய அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பாக்வளைகுடா பகுதியில் உள்ள மீன்பிடி படகுகளின் நெருக்கத்தை குறைக்கும் நோக்கத்துடன் இந்த துறைமுகம் உருவாக்கப்பட உள்ளது.

இத்துறைமுகம், அலைதடுப்பு சுவர், படகுஅணையும் தளம், மீன் ஏலக்கூடம், தடுப்பு சுவர், மீன் உலர்களம்,

வலைபின்னும் கூடம் மற்றும் இதர கட்டுமான வசதிகளுடன் உருவாக்கப்படுவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் இவ்வாண்டிற்குள் முழுமையாக முடிக்கப்படும்.

### 5.8.7 மத்திய அரசு பங்களிப்புடன்கூடிய நீலப்புரட்சித் திட்டம் – ஒருங்கிணைந்த மீன்வள மேலாண்மை மற்றும் வளர்ச்சி திட்டம் (2017–18)

மத்திய அரசின் நீலப்புரட்சி திட்டத்தின் கீழ் ரூ.125 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசு மீன்வளத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி மற்றும் மேலாண்மைக்காக "மீன்விரலிகள் செயல்திட்டத்தினை" மத்திய அமைச்சகம் அறிமுகப்படுத்தி தமிழ்நாட்டில் உள்நாட்டு மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பினை மேம்படுத்திட ஏதுவாக நன்னீர் மீன்குஞ்சு பொரிப்பகம் அமைத்திட 2017–18 ஆம் ஆண்டில் ரூ.125 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

தமிழ்நாட்டில் உவர்நீர்வாழ் உயிரின வளர்ப்பினை மேம்படுத்திட 60 ஹெக்டேர் நீர்ப்பரப்பளவிலான ஏற்கனவே உள்ள இறால் / மீன்பண்ணைகளை புனரமைப்பதற்கும் இடுபொருள் மானியம் வழங்குவதற்கும் மத்திய அரசின் பங்கான ரூ.93.60 இலட்சத்தை உள்ளடக்கிய ரூ.390 இலட்சம்

மொத்த மதிப்பீட்டிலான திட்டத்திற்கு 2017–18ம் ஆண்டில் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தகுதியான பயனாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர்.

## 5.9 சிறப்பு திட்டங்கள்

### 5.9.1 11 மீன் இறங்குதளங்களை மேம்படுத்துதல் மற்றும் நேர்கல்சுவர்கள் நிலைப்படுத்துதல் (நபார்டு)

மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்களால் 11.07.2017 அன்று சட்டசபையில் அறிவிப்பு செய்யப்பட்டதன்படி, இராமநாதபுரம் மாவட்டம் குந்துக்கல் கிராமத்தில் ரூ.70.00 கோடி மதிப்பில் மீன்இறங்குதளம் அமைப்பதற்கு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. (நபார்டு நிதி உதவி ரூ.45 கோடி மற்றும் மத்திய அரசு நிதி உதவி ரூ.25 கோடி) ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு ஒப்பந்தம் இறுதி செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின் தொடர்ச்சியாக, தூத்துக்குடி மாவட்டம், வேம்பார், நாகப்பட்டினம் மாவட்டம், கோடியக்கரை, சின்னாங்குடி காமேஸ்வரம், புஷ்பவனம், கடலூர் மாவட்டம், தாழங்குடா, காஞ்சிபுரம் மாவட்டம், சூலேரிக்காட்டுக்குப்பம், புதுக்கோட்டை மாவட்டம், கட்டுமாவடி மற்றும் பொன்னகரம் ஆகிய

9 இடங்களில் நபார்டு (RIDF XXIII) வங்கி நிதியுதவியுடன் மொத்தம் ரூ.29.50 கோடி மதிப்பீட்டில் மீன்இறங்கு தளங்கள் அமைக்க அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு பணி ஆணை 9 இறங்குதளங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கன்னியாகுமரி மாவட்டம், குறும்பனையில் ரூ.11 கோடி மதிப்பீட்டில் மீன்இறங்குதளம் அமைப்பதற்கும், கடியபட்டிணத்தில் ரூ.4 கோடி செலவில் நேர்கல் சுவர்களை நிலைப்படுத்துவதற்கும் அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு பரிசீலனையிலுள்ளது.

### 5.9.2. ஜியோ சிந்தடிக் குழாய்கள் மூலம் கடலரிப்பு தடுக்கும் முன்னோடித் திட்டம் (நபார்டு)

கடலரிப்பினை தடுப்பதற்கு மணல் நிரப்பப்பட்ட ஜியோ சிந்தடிக் குழாய்கள் மூலம் தேசிய கடல்வள தொழில்நுட்ப நிறுவனத்தால் வெற்றிகரமாக ஏற்படுத்திய திட்டத்தினை ரூ.20 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கி நிதியுடன் மிகவும் பாதிப்புக்குள்ளான இடங்களில் கடல் அரிப்பினை தடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 5.9.3 கடலோர பேரிடர் அபாயக்குறைப்பு திட்டம் (CDRRP)

மீன்பிடி தொழிலும் மீனவர் சமுதாயமும் இயற்கை இடர்பாடுகள், பருவகால மாற்றம் மற்றும் மாறிவரும் கடல் சுற்றுப்புற சூழல் ஆகியவற்றால் அதிக பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. கடல் மீன்வளத்தை மேம்படுத்தவும், மீனவர்கள் வாழ்வாதாரத்தை உறுதி செய்யவும், உலக வங்கி நிதி உதவியுடன், "கடலோர பேரிடர் அபாயக்குறைப்புத் திட்டத்தின் (CDRRP)" கீழ் பின்வரும் திட்டங்களை செயல்படுத்திட, அரசு ரூ.321.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

அதன் விவரம் அட்டவணை 5ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை–5**
**கடலோர பேரிடர் அபாயக்குறைப்புத் திட்டப்பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி விவரம்**

| I. | மீன்வள உட்கட்டமைப்பு | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|
| அ) | நடைமுறையிலுள்ளஅவசர கால சுனாமி மறுசீரமைப்பு திட்ட பணிகள் | 132.30 |
| ஆ) | புதிய பணிகள் (2 திட்டங்கள்) | 78.00 |
| இ) | புதிய திட்டங்களுக்கான ஆய்வு | 10.00 |
| II | நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை திட்டம் | 38.86 |

| | | |
|---|---|---|
| | (FIMSUL) | |
| III | கம்பியில்லா தொலை தொடர்பு வசதியளித்தல் | **62.14** |
| | **மொத்தம்** | **321.30** |

நடைமுறையிலுள்ள அவசர கால சுனாமி மறுசீரமைப்பு கட்டமைப்பு பணிகள் முடிவடைந்துள்ளன. புதிய பணிகள் திட்டத்தின் கீழ் புன்னக்காயல் மீன் இறங்குதள பணிகள் முடிவடைந்துள்ளன மற்றும் மல்லிப்பட்டிணம் மீன்பிடி துறைமுக பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

### 5.9.4. சுனாமி மறுசீரமைப்புத் திட்டத்தில் மீன் இறங்குதளங்கள் கட்டுதல் (TRP)

தமிழகத்தில் பல்வேறு கடலோர கிராமங்களில் பத்து புதிய மீன் இறங்குதளங்கள் அமைக்க, அரசு ரூ.49.97 கோடி ஒப்புதல் அளித்துள்ளது. அவற்றுள், அண்ணாமலைச்சேரி மற்றும் பெரியமாங்கோடு தவிர, அனைத்து இடங்களிலும் மீன் இறங்குதளங்கள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. திருவள்ளூர் மாவட்டம் அண்ணாமலைச்சேரி மற்றும் பெரியமாங்கோடு மீன் இறங்கு தளங்கள் கட்டுவதற்கு தேசிய வன உயிரின வாரியத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வனத்துறையின் உரிய சட்ட அனுமதி வழங்கப்பட்டதும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 5.9.5 அரசு மற்றும் தனியார் பங்களிப்பு (Public Private Partnership (PPP)) முறையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மணக்குடியில் மீன்பிடி துறைமுகம் கட்டுதல்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மணக்குடி மீனவ கிராமத்தில், அரசு மற்றும் தனியார் பங்களிப்பில் Public-Private Partnership (PPP) வடிவமைப்பு, கட்டுமானம், நிதி, இயக்குதல் மற்றும் மாற்றுதல் Design Build Finance Operate and Transfer (DBFOT) அடிப்படையில் மீன்பிடி துறைமுகம் ரூ.72.44 கோடி திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் ஒத்துழைப்புடன் அமைக்க கொள்கை அளவில் இந்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. மணக்குடியில் மீன்பிடி துறைமுகம் நிறுவிட சலுகைதாரர் தேர்வு செய்திட, கருத்துரு சமர்ப்பிப்பதற்கான வேண்டுகோள் ஒப்பந்தப்புள்ளி Request for Proposal (RFP) பரிசீலிக்கப்பட்டு, தகுதி பெற்ற சலுகைதாரருக்கு ஆணைக்கடிதம் Letter of Award (LoA) வழங்கப்பட்டு, சலுகைதாரருடன் சலுகை ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

## 5.9.6 நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை திட்டம் – II (FIMSUL-II)

உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை திட்டம் – IIஇன் கீழ் மீனவர்களின் சமூக வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரத்தினை மேம்படுத்திடும் வகையில் கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- திறன் மற்றும் தொழில் மேம்பாட்டு பயிற்சிகள், கூண்டுகளில் மீன்வளர்த்தல், ஆளி மற்றும் சிப்பி வளர்ப்பு, கடற்பாசி வளர்த்தல் போன்ற திட்டங்கள் மூலம் மாற்று வாழ்வாதாரத்திற்கான உதவிகள் வழங்குதல்
- மீன்பிடிக்கும் போது கடலில் ஏற்படும் ஆபத்து காலங்களில் தொடர்பு கொள்ள ஏதுவாக பாரம்பரிய மீன்பிடி கலன்கள் மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட படகுகளுக்கு கம்பியில்லா தொலைதொடர்பு கருவிகள் வழங்குதல்.
- கடல் மீன்வளத்தை சிறந்த முறையில் நிர்வகிக்க கூட்டு மேலாண்மை குழுக்கள் கிராம, மாவட்ட மற்றும் மண்டல அளவில் அனைத்து 13 கடலோர மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது. மாநில அளவில் கூட்டு மேலாண்மை குழு அமைக்கப்படும். அனைத்து

முக்கியமான மீன்பிடி துறைமுகம்/ மீன்பிடி இறங்கு தளங்களில் உள்ளூர் மீனவ பங்கு உரிமையாளர்களை கொண்ட உடைமைகளை நிர்வகிக்கும் மேலாண்மை குழு அமைக்கப்பட்டு அவர்களுக்கு மீன்பிடி துறைமுக/இறங்குதள வளாகத்தினை சுகாதாரமான முறையில் பராமரிப்பது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன்பிடி இறங்கு தளங்களை சுகாதாரமான முறையில் பராமரிக்கத் தேவையான நிதி ஆதாரங்களைப் பெருக்கி, சுகாதாரத்தை மேம்படுத்திடவும், மீனின் தரத்தினை உறுதி செய்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- புதிய மைய மீன்வள நூலக கட்டிடம் பசுமை கட்டிட முறையில் உருவாக்கப்பட்டு அதில் மின்னனு நூலகம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

. மீனவ கைம்பெண்களின் வாழ்வாதாரத்திற்கு உதவி செய்யும் வகையில் 12 நவீன மீன் விற்பனை நிலையங்கள் காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் அமைக்கப்பட்டு, மீனவ கைம்பெண்களால் நடத்தப்பட்டு

வருகிறது. மேலும் அவர்களுக்கு மதிப்புக்கூட்டிய மீன் உணவு பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

### 5.9.7 கூடங்குளம் அணுமின் நிலையம் அருகாமையிலுள்ள கிராமங்களின் அபிவிருத்தி திட்டம் (பெருநிறுவன சமூக பொறுப்பு நிதி)

கூடங்குளம் அணுமின் திட்டப்பகுதியில் அருகாமையிலுள்ள கிராமங்களின் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் அருகாமையிலுள்ள கிராமங்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.500 கோடியில் மீனவர்கள் பயனுறும் வகையில் கடலோர உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளுக்காக ரூ.92 கோடி நிதியினை அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு உவரி கிராமத்தில் குளிர்பதன கிடங்கு, மீன்இறங்குதள உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நவீன மீன்அங்காடி கட்டுதல் பணிகளும், கூத்தங்குழி மற்றும் பெருமணல் கிராமங்களில் நேர்கல் சுவர் அமைக்கும் பணியும், கூட்டப்பனை கிராமத்தில் வலை பின்னும் கூடம் கட்டுமானப் பணியும் மீனவர்களின் பயன்பாட்டிற்காக செயல்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

### 5.9.8 நாகப்பட்டினம் மாவட்டம் வெள்ளப்பள்ளம் கிராமத்தில் மீன்பிடி துறைமுகம் அமைத்தல்

வெள்ளப்பள்ளம் கிராம மீனவர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வுகாணுமுகமாக நாகப்பட்டினம் மாவட்டம் வெள்ளப்பள்ளம் கிராமத்தில் தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டதன் அடிப்படையில் ரூ.100 கோடியில் மீன்பிடி துறைமுகம் அமைக்கப்படும்.

### 5.9.9 நாகப்பட்டினம் மாவட்டம் தரங்கம்பாடி கிராமத்தில் மீன்பிடி துறைமுகம் அமைத்தல்

நாகப்பட்டினம் மாவட்டம் தரங்கம்பாடியில் உள்ள மீனவர்களின் நீண்ட கால தேவையைக் கருத்தில் கொண்டு தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டதன் அடிப்படையில் ரூ.120 கோடியில் மீன்பிடி துறைமுகம் அமைக்கப்படும்.

### 5.9.10 கன்னியாகுமரி மாவட்டத்தில் மூன்று மீன் இறங்கு தளங்கள் அமைத்தல்

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பொழிக்கரை, கேசவன்புத்தன்துறை மற்றும் பள்ளம்துறை ஆகிய மூன்று

இடங்களில் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும்முகமாக ரூ.12 கோடியில் மீன்பிடி இறங்கு தளங்கள் அமைக்கப்படும்.

**5.10 உள்நாட்டு மீன்வள மேம்பாடு**

அதிகரித்துவரும் மக்கள் தொகையின் ஊட்டச்சத்து உணவுப்பாதுகாப்பினை உறுதிசெய்திடும் பல்வேறு பிரிவுகளில் நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஒன்றாகும்.

உள்நாட்டு மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பின் முதன்மையான நோக்கங்கள்

- மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தியினை அதிகரிக்கச் செய்வது
- மீன்வளர்ப்போர்களுக்கு தரமான மீன்குஞ்சுகள் வினியோகிப்பது
- ஊரக சுயவேலை வாய்ப்புகளை உருவாக்குவது மற்றும்
- ஊரகப் பகுதி மக்களுக்கு புரதம் மிகுந்த உணவினை வழங்குவதுமாகும்

வளர்ப்பு மீன்வளம் என்பது கூட்டின மீன் வளர்ப்பு முறையில் உள்நாட்டு மீன் இனங்களான இந்திய பெருங்கெண்டைகள், அயல்நாட்டு கெண்டைகள், மரபுவழி மேம்படுத்தப்பட்ட பண்ணை திலேப்பியா, அமூர் கெண்டை,

ஜெயந்தி ரோகு, பங்காசியஸ் போன்ற மீனினங்களை குளங்களில் நீரின் அனைத்து மட்டங்களிலும் உருவாகும் உணவினை திறம்பட பயன்படுத்தி வளர்ப்பதே ஆகும். மரபுவழி மேம்படுத்தப்பட்ட பண்ணை திலேப்பியா, பங்காசியஸ் போன்ற மீன்கள் ஓரின மீன் வளர்ப்பு முறையில் குளங்கள் மற்றும் கூண்டுகளில் வளர்ப்பதாகும்.

### 5.10.1 உள்நாட்டு மீன்வளத்தில் மேற்கொள்ளப்பட்ட உத்திகள் / சிறப்பு முயற்சிகள்

- மிதவை கூண்டுகளில் மீன்வளர்ப்பதன் மூலம் மீன்குஞ்சு வளர்ப்பு மற்றும் மீன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வது குறித்தான செயல்முறை விளக்கம் மூன்று நீர்த் தேக்கங்களில் அளிக்கப்பட்டது.
- மீன் பண்ணை பரப்பளவினை அதிகரித்திடவும், மீன்குஞ்சு பொரிப்பகம் அமைப்பதற்கும், மீன் வளர்ப்பு குளங்களில் மீன்வளர்ப்பு செய்திடவும், ஏற்கனவே உள்ள மீன் குளங்களை சீரமைக்கவும், குறுகிய காலத்தில் வளரும் மீன் இனங்களை பல்நோக்கு பண்ணைக்குட்டைகளில் வளர்த்திடவும் மானிய உதவிகள் வழங்கி விவசாயிகளை ஊக்குவித்தல்.

- வேகமாக வளரும் மரபுவழி மேம்படுத்தப்பட்ட பண்ணை திலேப்பியா மீன் வளர்ப்பு தொழில் நுட்பங்களை பரவலாக்குதல்.
- பாசன குளங்களில் தீவிர மீன்வளர்ப்பு முறைகளை அறிமுகப்படுத்தி உகந்த அளவில் மீன்குஞ்சுகளை இருப்பு செய்து மேலாண்மை செய்தல் மூலம் மீன் உற்பத்தியினை அதிகரிக்கும் நடவடிக்கைகளை பிரபலப்படுத்துதல்.
- மீன் வளர்ப்போருக்கு பலதரப்பட்ட மீன்வளர்ப்பு முறைகள் மற்றும் தொழில் நுட்பம் குறித்து திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல் மற்றும் துறை அலுவலர்களுக்கு மீன் இனப்பெருக்கம், மீன்குஞ்சு வளர்ப்பு மற்றும் நன்னீர் உயிரின வளர்ப்பு முறைகளில் சமீபத்திய முன்னேற்றங்களில் பயிற்சியளித்தல்.

தமிழ்நாட்டில் **3.83** இலட்சம் ஹெக்டேர் நீர்பரப்பு மீன்வள மேம்பாட்டிற்கு உகந்ததாக இருந்தாலும், இந்நீர்நிலைகள் பருவ மழையினை மட்டுமே நம்பியுள்ளன. பருவம் தவறிய மற்றும் குறைவான மழை பொழிவால் நீர் நிலைகளில் குறுகிய கால நீர் இருப்பு, மீன் இனப்பெருக்க காலம் மற்றும் போதிய நீர் ஆகிய இவ்விரண்டும் பொருந்தாத காரணத்தால் தரமான மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்வதில்

சிரமங்கள், குறைந்த விலையில் தரமான மீன்தீவனம் கிடைக்காமை போன்றவை மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தியினை பாதிக்கக்கூடிய காரணிகளாக உள்ளன.

இத்தகைய இடர்பாடுகளை களைந்திட மீன்வளத்துறை கீழ்காணும் பல்வேறு குறை நிவர்த்தி நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

- சுற்றுச்சூழலுக்குகந்த வளங்குன்றா மீன்/இறால் வளர்ப்பினை மேற்கொள்ளுதல்
- பொது பயன்பாட்டிலுள்ள நீர் நிலைகளில் அறிவியல் ரீதியில் மேம்படுத்தப்பட்ட பாரம்பாரிய மீன் வளர்ப்பு மற்றும் மிததீவிர மீன்வளர்ப்பு முறைகள் மூலம் பலமுறை இருப்பு மற்றும் பலமுறை அறுவடை செய்தல் மற்றும் கூண்டுகளில் மீன்வளர்ப்பு முறைகளை அறிமுகப்படுத்துதல்
- பண்ணை குட்டைகள் / பல்நோக்கு பண்ணை குட்டைகளில் வேளாண்மையுடன் மீன்வளர்ப்பினை ஒருங்கிணைந்து அதன்மூலம் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் ஈட்ட வழிவகை செய்தல்.
- வேகமாக வளரும் மீன் இனங்களான, அமூர் கெண்டை, ஜெயந்தி ரோகு, மரபுவழி மேம்படுத்தப்பட்ட பண்ணை

திலேப்பியா(GIFT) மற்றும் பங்காஸியஸ் (pangasius) போன்ற மீன் இனங்களை அறிமுகப்படுத்தி அதனை வளர்க்கும் தொழில்நுட்பத்தை பரவலாக்குதல் மற்றும் இவ்வகை மீன் இனங்களின் மீன்குஞ்சு பொரிப்பகங்கள் அமைத்து மீன் குஞ்சுகள் உற்பத்தியினை அதிகரிக்கச் செய்தல்.

- மீன்/ இறால் குஞ்சு பொரிப்பகங்கள், மீன் வளர்ப்பு, மீன் தீவன உற்பத்தி நிலையம் மற்றும் சுகாதாரமான மீன் விற்பனை நிலையம் ஆகியவற்றிற்கான உட்கட்டமைப்புகளை அமைத்து இயக்குதல் மற்றும் செயல்படுத்துவதற்கு மீன்வளர்ப்போர் மற்றும் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப, நிதி மற்றும் விரிவாக்க உதவிகள் வழங்கி ஊக்குவித்தல்.
- ஊரக மகளிர் மற்றும் இளைஞர்களுக்கு மீன் குஞ்சு வளர்ப்பு, மீன் மற்றும் வண்ண மீன் வளர்ப்பு மூலமாக வேலைவாய்ப்பினை உருவாக்குதல்.

### 5.10.2 மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் ( DFFDAs )

தமிழ்நாட்டில் மீன் வளர்ப்பினை பிரபலபடுத்தவும் மற்றும் ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்பினை உருவாக்கவும்,

சென்னை தவிர **31** மாவட்டங்களில் இருந்த மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் (FFDA) மற்றும் உவர்நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் (BFDA) ஒருங்கிணைத்து மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளாக (DFFDA) செயல்பட்டு வருகின்றன.

விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சியளிப்பதுடன் மீன்வளர்ப்பிற்கு தேவையான மானியங்களை அளித்து மீன் வளர்ப்பினை ஊக்குவித்தல், தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் விரிவாக்க உதவி அளித்தல் இம்முகமைகளின் முக்கிய செயல்பாடுகளாகும். இந்த மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் அந்தந்த மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலைத்த வளம் குன்றா உவர்நீர் மீன்வளர்ப்பு முறையினை மேம்படுத்தும்பொருட்டு, தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் செயல்பட்டுவரும் அனைத்து மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளும் (DFFDA) உவர்நீர் மீன் வளர்ப்பினை மேம்படுத்தவும், கடலோர நீர் வாழ் உயிரின வளர்ப்பு ஆணைய சட்டம் **2005**ன்படி வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல் மற்றும் சிறப்பான செயல்முறைகள் ஆகியவற்றை கடைபிடித்து ஒழுங்குபடுத்தும்

பணிகளை மேற்கொண்டு வருகின்றன. கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தில் இதுவரை **1859** இறால் பண்ணைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 5.10.3 நீர்த்தேக்க மீன்வளம்

தமிழ்நாட்டில் பெரிய, நடுத்தர மற்றும் சிறிய என மொத்தம் **61** நீர்தேக்கங்களில் மீன்வள மேலாண்மை மீன்துறையின் கட்டுப்பாட்டிலுள்ளன. அவற்றில் உள்நாட்டு மீன்வளத்தினைப் பெருக்கிட **53** நீர்த்தேக்கங்கள் மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டிலும் **8** நீர்த்தேக்கங்கள் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டிலும் உள்ளன.

- நீர்த்தேக்கங்களை தங்களது வாழ்வாதாரமாக கொண்டுள்ள உள்நாட்டு மீனவர்கள் மீன்உற்பத்தி மற்றும் வருவாயினை பெருக்கும் நோக்கோடு மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள **53** நீர்த்தேக்கங்களின் மீன்பிடி உரிமை குத்தகைக்கு விடப்பட்டு வருகின்றன.
- மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களின் மீன்வளப் பணிகளுக்கு குத்தகை மற்றும் ஏலம் முறையில் பொதுமக்களுக்கு

5 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்படுகிறது. மீனவர் கூட்டுறவு சங்கங்களும், கடன் தீர்வு திறன் சான்றிதழ் அளிப்பதில் விலக்களிக்கப்பட்டு ஏலத்தில் கலந்துகொள்ளலாம். மீனவர் கூட்டுறவு சங்கங்கள் ஏல நடவடிக்கைகளில் தாராளமாக கலந்துகொள்ளலாம். ஏலதாரர்கள் மீனவர் கூட்டுறவு சங்கத்திலுள்ள உறுப்பினர்களை மீன்பிடிக்க பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

- 2017-18 ஆம் ஆண்டில் 23 நீர்த்தேக்கங்களின் குத்தகை மூலம் ரூ.3.81 கோடி வருவாய் அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. இதர நீர்த்தேக்கங்கள் 2018-19 ஆம் ஆண்டில் குத்தகைக்கு விடப்படும்.
- குத்தகைதாரரால் பிடிக்கப்படும் மீன்கள் உள்ளூர் பொதுமக்கள் மற்றும் சில்லரை மீன் வியாபாரிகளுக்கும் மீதமுள்ள மீன்கள் உள்ளூர் மீன் அங்காடிகளுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.
- மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 53 நீர்த்தேக்கங்களின் மீன்உற்பத்தியினை அவற்றின் உற்பத்தி திறனுக்கேற்றவாறு பயன்படுத்திட நீர்த்தேக்கங்களின் மீன்பிடி உரிமையினை அரசாணை

எண்.165 கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை (FS3) நாள் 25.09.2012ன்படி குத்தகை மற்றும் ஏலமுறை அறிமுகப்படுத்தப்பட்டு 2012ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 5.10.4 மீன்குஞ்சு உற்பத்தி/ மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள்

மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டில் 10 இடங்களில் மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களும், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின்கீழ் ஒரு மீன்குஞ்சு உற்பத்தி நிலையமும் செயல்பட்டு வருகின்றன.

மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டில் 37 மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்களும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின்கீழ் 5 மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன.

தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம், தேசிய புரதச்சத்து மேம்பாட்டு இணை உணவு இயக்கம், தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம், தேசிய வேளாண் ஊரக வளர்ச்சி வங்கி போன்றவற்றின் மூலம் கூடுதலாக 34.8 ஹெக்டேர் மீன்வளர்ப்பு பரப்பு அரசு மற்றும் தனியார் மீன் பண்ணைகளில் மேம்படுத்தப்பட்டு / புதியதாக உருவாக்கப்பட்டுள்ளது.

## 5.11 திறன் மேம்பாட்டு பயிற்சிகள்

### 5.11.1 மீனவ இளைஞர்களுக்கு கடற்சார் கல்வி

மீனவ இளைஞர்களின் திறனை மேம்படுத்தவும், வேலை வாய்ப்பினை உருவாக்கிடவும், அரசால் அறிவிக்கப்பட்ட குறிப்பிட்ட **6** கடற்சார் கல்வி பாடப்பிரிவுகளைப் பயின்றிட, மீனவ குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு, நபர் ஒருவருக்கு ரூ.**50,000/–** என்ற வீதத்தில் அரசு நிதியுதவி வழங்குகிறது.

**2018–19** ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளது.

### 5.11.2 மீனவ இளைஞர்களுக்கு சான்றிதழ் படிப்புகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற விதி எண்.**110**–ன் கீழ், மீனவ இளைஞர்களுக்கு இந்திய கப்பற்படை மற்றும் இந்திய கடலோர காவல்படையில் வேலை வாய்ப்பினைப் பெற்றிட தேவையான சிறப்பு பயிற்சி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, அரசு ரூ.**1.04** கோடிக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கடலோர காவல்படையுடன் ஒருங்கிணைந்து, ஒரு வருடத்தில் மொத்தம் 300 மீனவ இளைஞர்களுக்கு 6 தொகுதிகளாக பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது. இதுவரை கடலூர், இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சார்ந்த 94 மீனவ இளைஞர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்பட்டு பயிற்சி முடிந்தமைக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

### 5.11.3 அகில இந்திய குடிமைப்பணியில் சேர்வதற்கு மீனவ இளைஞர்களுக்கு சிறப்பு பயிற்சி அளித்தல்

இந்திய குடிமைப் பணி போட்டித் தேர்வுகளில் திறனுடன் எதிர்கொள்ள ஏதுவாக, ஆண்டுதோறும் 20 மீனவ இளைஞர்களுக்கு 6 மாத காலம் பிரத்யேக பயிற்சி அரசு செலவில் வழங்கிட தமிழக அரசு ஆணை வழங்கியுள்ளது. இப்பயிற்சியானது 18.12.2017 அன்று முதல் அண்ணா மேலாண்மை நிலையத்தில் (அகில இந்திய குடிமை பணிகளுக்கான பயிற்சி நிலையம்) மீனவ இளைஞர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சிக்கான அனைத்து செலவினங்களும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

## 5.12 விரிவாக்கப்பணிகள்

மீனவர்கள், மீன்வளர்ப்போர் மற்றும் இதர பங்கீட்டாளர்களுக்கு அரசு நலத்திட்டங்களை கொண்டு சேர்க்கும் விதமாக மீன்வளத்துறையின் விரிவாக்கம் மற்றும் பயிற்சிப் பிரிவு செயல்பட்டு வருகிறது.


மீன்வளத்துறையானது, தமிழக அரசால் நடத்தப்படும் பொருட்காட்சிகள், சுற்றுலா மற்றும் தொழிற்பொருட்காட்சிகளில் பங்கு பெற்று மீனவர்கள் மற்றும் மீன்வளர்ப்போர் புதிய தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ள உதவுகிறது. மீனவர்கள் மற்றும் மீன்வளர்ப்போருக்கு தேவையான பல்வேறு பயிற்சிகள் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிகள், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் மற்றும் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவியுடன் வழங்கப்பட்டு வருகிறது.

## 5.13 மீனவ கூட்டுறவு சங்கங்களின் மேலாண்மை

தமிழக மீனவர் மற்றும் மீனவ மகளிரது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதில் மீனவ கூட்டுறவு சங்கங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மீன்வளத்துறையானது மீனவர் /

மீனவ மகளிருக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக அரசின் பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 1,431 தொடக்க மீனவர் / மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் / மாவட்ட கூட்டுறவு இணையங்கள் / மாநிலத் தலைமை கூட்டுறவு இணையம் ஆகியவற்றில் 7.17 இலட்சம் மீனவர் / மீனவ மகளிர் அங்கத்தினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். மீனவர் கூட்டுறவு சங்கங்கள் 51 முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும் 15 பகுதி நேர நியாய விலைக்கடைகளையும் நடத்தி வருகின்றன.

**நிர்வாக அமைப்பு**



மீனவர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை மற்றும் அதன் உறுப்பினர்கள் விவரம் கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை:6**
**மீனவ கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள் விவரம்**

| சங்கத்தின் வகை | சங்கங்களின் எண்ணிக்கை | உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| **தொடக்க கூட்டுறவு சங்கங்கள்** | | |
| கடல் மீனவர் கூட்டுறவு சங்கங்கள் | 558 | 3,56,992 |
| கடல் மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் | 461 | 2,60,732 |
| உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்கள் | 300 | 82,986 |
| உள்நாட்டு மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் | 72 | 7,883 |
| இதர வகைச் சங்கங்கள் | 27 | 6,791 |
| **மொத்த கூட்டுறவு சங்கம் மற்றும் சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள்** | **1,418** | **7,15,384** |
| மாவட்ட மீனவர் கூட்டுறவு இணையம் | 12 | 998 |

| | | |
|---|---|---|
| தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் | 1 | 814 |
| **மொத்தம்** | **1,431** | **7,17,196** |

## 6. தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் (வரையறுக்கப்பட்டது) (Tamil Nadu State Apex Fisheries Co-operative Federation Limited (TAFCOFED)

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் லிமிடெட், தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம், 1983ன் கீழ் பதிவு செய்யப்பட்டு கடந்த 19.10.1992 முதல் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தற்பொழுது இணையத்தில் 483 கடல் மீனவர் கூட்டுறவு சங்கங்கள், 151 உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்கள், 171 மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 9 மாவட்ட மீனவ கூட்டுறவு இணையங்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். இவ்வுறுப்பினர் சங்கங்கள், இணையத்திற்கு ரூ.91.725 இலட்சம் பங்குத் தொகையாக செலுத்தியுள்ளனர்.

இணையத்தின் செயற் பதிவாளராக மீன்துறை இயக்குநர் அவர்களும், மேலாண்மை இயக்குநராக மீன்துறை கூடுதல் இயக்குநரும் இணையத்தை நிர்வகித்து

வருகின்றனர். இணையத்தின் கட்டுப்பாட்டில் சென்னை, நாகப்பட்டினம், இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் நாகர்கோவில் ஆகிய ஐந்து இடங்களில் திட்ட அலுவலகம் செயல்பட்டு வருகின்றன.

தமிழ் நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் முக்கிய திட்டங்கள் பின்வருமாறு:

**6.1 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகளுக்கு மானிய விலையில் விற்பனை வரிவிலக்களிக்கப்பட்ட தொழிலக மண்ணெண்ணெய் வழங்குதல்.**

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த இயந்திரம் பொருத்திய நாட்டுப்படகுகளுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட மானியத்துடன் கூடிய தொழிலக மண்ணெண்ணெயினை 13 தொடக்க மீனவர் கூட்டுறவு சங்கங்கள் மூலம், 2017-18 ஆம் ஆண்டில் 4728 கிலோலிட்டரும் விநியோகிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ரூ. 28.30 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 6.2 மீன்பிடி கலன்களுக்கு விற்பனைவரி விலக்களிக்கப்பட்ட டீசல் வழங்குதல்.

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தால் நிறுவப்பட்டுள்ள 13 டீசல் விற்பனை நிலையங்கள் மூலம் 2017-18 ஆம் ஆண்டில் 22,775 கிலோ லிட்டர் விற்பனை வரிவிலக்களிக்கப்பட்ட டீசல், இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகு மற்றும் விசைப் படகுகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ரூ. 4.423 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 6.3 நவீன மீன் விற்பனை நிலையங்கள்.

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம், பொது மக்களுக்கு தரமான மீன்களை நியாயமான விலையில் வழங்கிடும் பொருட்டு தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் மற்றும் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்ட நிதியுதவியுடன், இராமநாதபுரம், பரமக்குடி, நெய்வேலி, கன்னியாகுமரி மற்றும் மதுரை இடங்களில் நவீன மீன் விற்பனை நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும் சென்னை மற்றும் திருநெல்வேலியில்

மீன்விற்பனை நிலையம் அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

### 6.4 நீலப்புரட்சித் திட்டத்தின் கீழ் மீனவர்களுக்கு மீன்பிடி இடுபொருட்கள் 50 சதவிகித மானியத்தில் வழங்குதல்.

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக்கூட்டுறவு இணையத்தின் மூலம் 100 மீனவ பயனாளிகளுக்கு நீலப்புரட்சி திட்டத்தின் கீழ் மீன்பிடி இடுபொருட்களான கண்ணாடி நாரிழைப் படகு, வெளி / உட்பொருத்தும் இயந்திரம், வலை மற்றும் குளிர்காப்பு பெட்டிகளை 50 விழுக்காடு மானியத்தில் ரூ.4.25 கோடி செலவில் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நாளது தேதிவரையில் 47 மீனவப் பயனாளிகளுக்கு மீன்பிடி இடு பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

### 6.5 உள்நாட்டு மீனவர்களின் மீன்பிடித் திறனை மேம்படுத்திட 50 சதவிகித மானியத்தில் 500 கண்ணாடி நாரிழைப் பரிசல்கள் வழங்குதல்.

டாப்கோபெட் மூலம் உள்நாட்டு மீனவர்களின் மீன்பிடித்திறனை மேம்படுத்திட 500 பயனாளிகளுக்கு 50 விழுக்காடு மானிய விலையில் ரூ.62.50 இலட்சம் மதிப்பீட்டில் கண்ணாடி நாரிழைப் பரிசல்கள் வழங்கிட நடவடிக்கை

மேற்கொள்ளப்பட்டு நாளது தேதிவரை **154** பயனாளிகளுக்கு கண்ணாடி நாரிழைப் படகுகள் வழங்கப்பட்டுள்ளது.

**6.6 கடல் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனத்தின் மானியத்துடன் குளிர்காப்பு பெட்டிகள் வழங்குதல்.**

2017-18 ஆம் ஆண்டில், தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தின் மூலம், இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகளுக்கு கடல் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனத்தினால் (MPEDA) 25 விழுக்காடு மானியத்துடன், 105 குளிர்காப்பு பெட்டிகள் ரூ.1.44 இலட்சம் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

**6.7 பயிற்சித் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டம்**

ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள **412** தமிழக மீனவர்களுக்கு ‘‘கடல்சார் மேலாண்மை, தொலைத்தொடர்பு சாதனங்கள் பழுது பார்த்தல், மற்றும் இயந்திர பராமரிப்பு’’ தொடர்புடைய பயிற்சி, மத்திய மீன்வள தொழில்நுட்பம் மற்றும் கடல்சார் நிறுவனத்தின் (CIFNET) தொழில்நுட்ப உதவியுடன் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் (NFDB) நிதியுதவியுடன் வழங்கப்பட்டுள்ளது.

கடலோர மாவட்டங்களில் உள்ள 2227 மீனவ மகளிர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு ‘‘மதிப்பூட்டப்பட்ட மீன்பொருட்கள் தயாரிக்கும்’’ பயிற்சி ரூ. 26 லட்சம் செலவில் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் (NFDB) நிதியுதவியுடன் வழங்கப்பட்டுள்ளது.

## 6.8 சென்னை பழைய மகாபலிபுரம் சாலையில் புதிய பெட்ரோல் மற்றும் டீசல் சில்லரை விற்பனை நிலையம் நிறுவுதல்.

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தின் வருவாயினை அதிகரிக்கும் பொருட்டுடன் தன்னிறைவு எய்திடவும், சென்னை பழைய மகாபலிபுரம் சாலையில் வாணியஞ்சாவடியில் பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையம் ரூ.80 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

## 6.9 நவீன மீன் உணவகம் நிறுவுதல்.

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம், காஞ்சிபுரம் மாவட்டம் வாணியஞ்சாவடியில் ரூ.2.01 கோடி திட்ட மதிப்பீட்டில் நவீன மீன் உணவகம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதனில் ரூ.89 இலட்சம் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின்

நிதியுதவியுடனும், மீதமுள்ள தொகையான ரூ.1.12 கோடி இணையத்தின் சொந்த நிதியிலிருந்தும் செலவிடப்படும். கட்டுமானப்பணி முன்னேற்றத்தில் உள்ளது.

## 6.10 ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித்திட்டம் (ICDP)

கன்னியாகுமரி மாவட்டம் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித்திட்டத்தின் கீழ் மானியவிலை மண்ணெண்ணெயினை மீனவர் கிராமங்களுக்கு ஏற்றிச்சென்று விநியோகம் செய்வதற்காக ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் டேங்கர் லாரி ஒன்று கொள்முதல் செய்யப்படும்.

2017–18ஆம் ஆண்டில் திருவள்ளூர் மாவட்டம் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மீன் கொள்முதல் நிலையம் அமைத்தல் மற்றும் டீசல் கொள்முதல் செய்வதற்கு விளிம்புத்தொகை வழங்குதல் ஆகியவற்றிற்கு மொத்தம் ரூ. 10.80 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் டீசல் விற்பனை நிலையங்கள், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கீழக்கரை மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஜெகதாப்பட்டினம் டீசல் விற்பனை நிலையங்களின் அலுவலக கட்டிடங்களை மேம்படுத்துதல், மீனவர்களுக்கு தங்குதடையின்றி டீசல்

வழங்க ஏதுவாக டீசல் விற்பனை நிலையங்களுக்கு ஜெனரேட்டர் கொள்முதல் செய்தல், டீசல், மண்ணெண்ணெய் மற்றும் வெளிப்பொருத்தும் / உட்பொருத்தும் இயந்திரங்கள் மீனவர்களுக்கு கொள்முதல் செய்து வழங்கிட சுழற்சிநிதி தொகை ரூ.**102.00** இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் மூலம் செயல்படுத்தப்படும்.

### 6.11 நிதி நிலை

2017-18ம் ஆண்டில் இணையம் டீசல், மண்ணெண்ணெய் மற்றும் மீன் விற்பனை நிலையங்களில் நிகர இலாபமாக ரூ.**4.17** கோடி ஈட்டப்பட்டுள்ளது.

## 7. தமிழ்நாடு மீனவர் நல வாரியம் (TNFWB)

தமிழ்நாட்டில் மீன்பிடிப்பு மற்றும் அதனைச் சார்ந்த தொழிலினை மேற்கொள்ளும் அனைத்து தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பிற்கும், அவர்களது நலத்தினை உறுதி செய்வதற்காகவும், தமிழ்நாடு மீனவர் நல வாரியம் **2007–**ல் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாடு மீனவர் நல வாரியம், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும், மீன்வளத்துறை இயக்குநர் அவர்களை உறுப்பினர் செயலராகவும் கொண்டு மீனவர் நலவாரிய

திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. வாரியத்தின் உறுப்பினர்கள் தமிழ்நாடு அரசால் அவ்வப்போது நியமிக்கப்படுவர்.

மொத்தம் 4.50 இலட்சம் மீனவர் / மீனவ மகளிர் தொழிலாளர்கள் வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ளனர்.

தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தால் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது:-

## அட்டவணை: 7

## தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள்

| வ. எண் | நிவாரண உதவி விபரங்கள் | ஒரு நபருக்கான நிவாரண உதவி தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | விபத்து நிவாரணம் | |
| (அ) | விபத்தினால் மரணம் | 1,00,000 |
| (ஆ) | இரண்டு கைகள் இழப்பு | 1,00,000 |
| (இ) | இரண்டு கால்கள் இழப்பு | 1,00,000 |
| (ஈ) | ஒரு கை மற்றும் ஒரு கால் இழப்பு | 1,00,000 |
| (உ) | இரண்டு கண்களிலும் முற்றிலும் பார்வை இழப்பு | 1,00,000 |

| | | |
|---|---|---|
| (ஊ) | ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு | 50,000 |
| (எ) | மேலே கண்ட இனங்களில் குறிப்பிடாத வேறு கடுமையான காயம் ஏற்பட்டு உடல் உறுப்பு இழப்பு | 20,000 |
| 2. | விபத்தின் காரணமாக அல்லாமல் மீன்பிடிக்கையில் அல்லது அதற்குப் பின் உடனடியாக இறத்தல் | 1,00,000 |
| 3. | மீன்பிடிக்கையில் காணாமற்போன மீனவர் | 1,00,000 |
| 4. | இயற்கை மரணம் | 15,000 |
| 5. | ஈமச்சடங்கிற்கான உதவித் தொகை | 2,500 |

| 6. | **உறுப்பினர்களின் மகன் மற்றும் மகள் கல்வி உதவித் தொகை** | **விடுதியில் தங்காதோர்** | | **விடுதியில் தங்கி படிப்பவர்கள்** | |
|---|---|---|---|---|---|
| | | மாணவர் | மாணவியர் | மாணவர் | மாணவியர் |
| | அ) பத்தாம் வகுப்பு தேர்ச்சி | 1,250 | 1,500 | -- | -- |
| | ஆ) பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி | 1,750 | 2,000 | -- | -- |
| | இ)தொழிற்பயிற்சி (I.T.I) மற்றும் பல்தொழிற் நுட்ப பயிற்சி (Polytechnic) | 1,250 | 1,750 | 1,450 | 1,950 |
| | உ) இளங்கலை பட்டப்படிப்பு | 1,750 | 2,250 | 2,000 | 2,500 |
| | ஊ) முதுகலை பட்டப்படிப்பு | 2,250 | 2,750 | 3,250 | 3,750 |
| | எ) சட்டம், பொறியியல், | 2,250 | 2,750 | 4,250 | 4,750 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மருத்துவம் போன்ற தொழிற் கல்விகள் இளங்கலை | | | | |
| | ஏ) முதுகலை தொழிற் கல்விகள் | 4,250 | 4,750 | 6,250 | 6,750 |
| 7. | திருமண உதவி | | | ஆண் | பெண் |
| | அ) உறுப்பினரின் திருமண உதவி | | | 3,000 | 5,000 |
| | ஆ) உறுப்பினரின் மகன் அல்லது மகள் திருமணம் | | | 3,000 | 5,000 |
| 8. | மகப்பேறு | | | | |
| அ) | i) மகப்பேறு (மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/– வீதம் ஆறு மாதங்கள்) | | | 6,000 | |
| ஆ) | ii) கருச்சிதைவு | | | 3,000 | |
| இ) | iii) கருக்கலைப்பு | | | 3,000 | |

- 2017-18 ஆம் ஆண்டில் 4,274 கேட்பு விண்ணப்பங்களுக்கு உதவித் தொகை மற்றும் நிவாரணத் தொகையாக ரூ.2.81 கோடி மற்றும் மே **2018** வரை **503** கேட்பு விண்ணப்பங்களுக்கு ரூ.**0.22** கோடி பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் தேசிய மின்னணு பணப்பரிவர்த்தனை (NEFT) மூலமாக வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு மீன்வள பல்கலைக் கழகத்தில் B.F.Sc / B.E.(Fisheries) படிப்பதற்கு மீனவர் நலவாரிய

உறுப்பினர்களின் பிள்ளைகள் 8 பேருக்கு தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தின் மூலம் முதலாம் ஆண்டு கல்விக் கட்டணம் ஒரு மாணவருக்கு ரூ.61,690/– வீதம் மொத்தம் ரூ.4,93,520/– தொகை வழங்கப்பட்டுள்ளது.

- “ஒகி” புயலின் காரணமாக இறந்த 27 மீனவர்கள் மற்றும் காணாமல் போன 177 மீனவர்களின் குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.4.08 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

## 8. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் (வரையறுக்கப்பட்டது) (Tamil Nadu Fisheries Development Corporation Limited)

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் 1974–ஆம் ஆண்டு அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை நிறுவனமாக ரூ.5 கோடி அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனமாகவும் ரூ.4.45 கோடி செலுத்தப்பட்ட பங்கு மூலதனமாகவும் கொண்டு தொடங்கப்பட்டது. கழகத்தின் குழும இயக்குநர்கள் அரசால் நியமிக்கப்படுகின்றனர்.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மேலாண்மை இயக்குநர் / மீன்துறை இயக்குநர் தலைமையில் பொது மேலாளர், முதுநிலை மேலாளர்கள், மேலாளர்கள், துணை

மேலாளர்கள் மற்றும் உதவி மேலாளர்கள் ஆகியோரால் செயல்படுகிறது. கழகத்தின் களப்பணிகள் சென்னை, கோயம்புத்தூர், ஆழியார், மதுரை மற்றும் தூத்துக்குடி ஆகிய அலகுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது பல்வேறு நிலைகளில் 119 பணியாளர்கள் கழகத்தில் பணிபுரிந்து வருகின்றனர்.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் தனது கட்டுப்பாட்டில் சாத்தனூர், ஆழியார், அமராவதி, திருமூர்த்தி மற்றும் பாலாறு – பொறந்தாலாறு ஆகிய நீர்த்தேக்கப் பகுதிகளில் சுமார் 3.83 ஹெக்டரில் மீன்குஞ்சு உற்பத்தி / வளர்ப்பு பண்ணைகளை அமைத்துள்ளது. உற்பத்தி செய்யப்படும் தரமான மீன் குஞ்சுகள் தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழக கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யப்படுவதுடன், மீன்வளத்துறை மற்றும் தனியார் மீன் பண்ணைகளுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகக் கட்டுப்பாட்டில் உள்ள எட்டு நீர்த்தேக்கங்களில், வளங்குன்றா மீன் உற்பத்தியினை பெருக்கிட, அறிவியல் ரீதியான முறையில் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்படுகின்றன.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம், ஆழியார் மற்றும் திருமூர்த்தி ஆகிய இடங்களில் வண்ண மீன் உற்பத்தி நிலையங்களை அமைத்துள்ளது.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருப்பூர், பொள்ளாச்சி, உதகமண்டலம், தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் சில்லரை மற்றும் நடமாடும் மீன் விற்பனை நிலையங்கள் மூலமாக தரமான மீன்கள் மற்றும் மீன் உணவு பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

மாநிலத்தின் கடலோரப் பகுதிகளில் அமைந்துள்ள மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களில் கழகத்தால் 31 டீசல் எரியெண்ணெய் விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு, இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகுகள் மற்றும் விசைப்படகுகளுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட அதிவிரைவு டீசல் விநியோகம் செய்யப்படுகிறது.

## 8.1 பெட்ரோல் விற்பனை நிலையம்

**2017–18** ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் அதனுடைய முதலாவது பெட்ரோல் விற்பனை

நிலையத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக தூத்துக்குடி திரேஸ்புரத்தில் அமைத்து செயல்படுத்தி வருகிறது. 2017–18 ஆம் நிதியாண்டில் மார்ச் 2018 வரை 267 கிலோ லிட்டர் பெட்ரோல் விற்பனை செய்யப்பட்டு ரூ.4.90 இலட்சம் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. 2018–19 நிதியாண்டில் 300 கிலோ லிட்டர் பெட்ரோல் விற்பனை செய்யப்பட்டு ரூ.7.14 இலட்சம் இலாபம் ஈட்டப்படும்.

## 8.2 சேத்துப்பட்டு பசுமைப் பூங்கா மேலாண்மை

சென்னை பெருநகரத்தின் மையப் பகுதியாக கருதப்படும் சேத்துப்பட்டு ஏரியில் மீன்வளத் துறையால் ரூ.42 கோடி திட்டமதிப்பீட்டில் விளையாட்டு தூண்டில் மீன்பிடிப்பு வசதிகளுடன் கூடிய பசுமைப் பூங்கா ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பசுமைப் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள படகு குழாம், தூண்டில் மீன் பிடிப்பு, பன்னடுக்கு வாகன நிறுத்தகம், பூங்கா பொழுது போக்கு மையம், உணவகம், நடைபயிற்சிப்பாதை, சிறுவர்கள் விளையாட்டுப் பகுதி, முப்பரிமாண திரையரங்க நிலையம் போன்றவை தினந்தோறும் ஏராளமான பொதுமக்களை ஈர்க்கின்றன. இப்பசுமைப் பூங்கா வளாகத்தில் மீன்காட்சியகம் மற்றும் நீர்வாழ் உயிரின மெய்நிகர் காட்சியகம் (Aquarium-cum-Aquatic Virtual Reality Centre) ஒன்று

ரூ.6 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 8.3 தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தால் நவீன நடமாடும் கடல் மீன் விற்பனை உணவகங்கள் இயக்குதல்

2016-17ஆம் நிதியாண்டில், தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், நுகர்வோர்கள் எளிதில் வாங்கும் விலையில், சுவை மிகுந்த கடல் மீன் உணவுப் பொருட்களை, விற்பனை செய்ய சென்னை (மெரினா மற்றும் பெசன்ட் நகர்) கடற்கரை பகுதிகளில் ரூ.57.50 இலட்சம் திட்ட செலவினத்தில் 2 நடமாடும் கடல் மீன் விற்பனை உணவகங்கள் கழகத்தால் கட்டமைக்கப்பட்டு செயல்பாட்டில் இருந்து வருகின்றது.

### 8.4 கடல் மீன் உணவுப் பொருட்களை தயாரித்திட மைய சமையலறைக் கூடம் மற்றும் பயிற்சி மையம் ஒன்றினை அமைத்திடல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற விதி எண்.110ன் கீழ் அறிவிக்கப்பட்டபடி, தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் பொதுமக்களிடையே கடல் மீன் உணவுப் பொருட்களை உட்கொள்ளும் பழக்கத்தினை அதிகரித்திடவும் மற்றும் சுயவேலை வாய்ப்புகளை ஏற்படுத்திடவும், தமிழ்நாடு

மீன்வளர்ச்சிக் கழகம் மூலம் சென்னை இராயபுரத்தில் உடனடியாக சமையல் செய்து உண்ணக் கூடிய வகையிலான கடல் மீன் உணவுப் பொருட்களை தயாரித்து, சந்தைப்படுத்திடவும், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் ரூ.304.44 இலட்சம் மதிப்பீட்டிலான மைய சமையலறைக் கூடம் மற்றும் பயிற்சி மையத்தினை தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அமைக்கும் பணிகள் நடப்பாண்டில் முடிவடையும். சென்னை தேனாம்பேட்டையில் உள்ள தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்திற்கு சொந்தமான கடல் மீன் உணவகத்தை நவீனப்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சென்னை, வாணியஞ்சாவடியிலுள்ள அரசு இறால் பண்ணையினைப் பசுமைப் பூங்காவாக மேம்படுத்திடும் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான சாத்தியகூறு அறிக்கை தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 8.5 சென்னையில் இணையதளம் மூலம் மீன் விற்பனை வசதிகளை ஏற்படுத்துதல்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகமானது பொதுமக்களிடையே கடல் மீன் உணவுப் பொருட்களை உண்ண வேண்டியதன் அவசியத்தையும், அதனால் உடல்

நலனுக்கு ஏற்படக்கூடிய நன்மைகள் குறித்த விழிப்புணர்வை உருவாக்கிட பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. சென்னை மீன் விற்பனைப் பிரிவின் மூலம் சோதனை அடிப்படையில் இணையதளம் மூலமாக மீன் விற்பனையை மேற்கொள்ள ரூ.10 இலட்சம் செலவில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டம் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் (ம) நிருவாக சீர்த்திருத்தத்துறை அமைச்சர் அவர்களால் 25.05.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

## 8.6 தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் நிதி நிலை செயல்திறன்

2017-18ஆம் நிதியாண்டில் 2018 வரை தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மீன் விற்பனை, கடல் மீன் உணவு மையங்கள், டீசல் எரியெண்ணெய் / மண்ணெண்ணெய் விநியோகம் மற்றும் நீர்த்தேக்க மேலாண்மை ஆகிய வணிக ரீதியிலான செயல்பாடுகள் மூலமாக ரூ.10 கோடி இலாபம் ஈட்டியுள்ளது.

2018-19ஆம் நிதியாண்டில் ரூ.13 கோடி இலாபம் ஈட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2016-17ஆம் நிதியாண்டிற்கு தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகமானது ரூ.240.80 இலட்சத்தினை பங்கு ஈவுத்

தொகையாக மாநில அரசுக்கு செலுத்தியுள்ளது. 2017-18ஆம் நிதியாண்டில், ரூ.1 கோடியினை முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கியுள்ளது.

**2017–18**ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் ரூ.**96.60** இலட்சம் தொகையினை தனது பங்களிப்பாக தமிழ்நாடு மீனவ நலவாரியத்திற்கு வழங்கியுள்ளது.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் பல்வேறு மீனவர் நலன் மற்றும் மீன்வள பணிகளுக்காக ரூ.**24.96** இலட்சம் தொகையினை தனது சமூக நிறுவன பங்களிப்பு நிதியிலிருந்து செலவிட்டுள்ளது.

## 9. தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகமானது தமிழக அரசால் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக சட்ட எண். **12/2012** ன் படி, மாநில அரசின் நிதியுதவியுடன், மாநில வேளாண் பல்கலைக்கழக முறைகள் மற்றும் பாடத்திட்டத்தைத் தழுவி, இந்தியாவிலேயே முதன்முதலாக, மீன்வளத்தில் தனித்துவ தொழில் கல்வி வழங்கும் பல்கலைக்கழகமாக **19.06.2012** அன்று நாகப்பட்டினத்தில் ரூ.**18.10** கோடி செலவில் துவக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் மீன்வளக்கல்வி,

ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க கல்வி மூலம் தமிழகத்தின் மீன் உற்பத்தி மற்றும் அதன் பயன்பாட்டை மேம்படுத்தி வருகிறது. தற்போது பல்கலைக்கழகத்தின் பெயரானது தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. (அரசாணை எண். 21 கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை (FS4) நாள் 16.02.2018).

தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்திற்கு புதுடெல்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் அங்கமான தேசிய வேளாண் கல்வி அங்கீகார குழுவால் 31.03.2021 வரை, நவம்பர் 2017 அன்று அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இப்பல்கலைக்கழகமானது தொடங்கப்பட்ட மிக குறுகிய காலத்திலேயே தன் சிறப்பான செயல்பாட்டால் இந்திய வேளாண் அறிவியல் கழகத்தால் நடத்தப்பட்ட வேளாண் பல்கலைக்கழங்களுக்கான தர வரிசை (2016 –17) பட்டியலில், இந்தியாவின் தலைசிறந்த மற்றும் முதன்மை மீன்வள பல்கலைக்கழகமாக இடம் பிடித்துள்ளது.

அதோடு மட்டுமில்லாமல் புதுடெல்லியிலுள்ள பல்கலைக்கழக மானிய குழுவின் 12B அந்தஸ்தையும் பெற்றுள்ளது என்பது மேலும் சிறப்பாகும்.

## 9.1. பல்கலைக்கழகத்தின் தொலைநோக்குப் பார்வை

"அறிவியல் அடிப்படையிலான மீன்வள முன்னேற்றத்தால் மக்களின் உணவு மற்றும் ஊட்டச்சத்துத் தேவையைப் பூர்த்தி செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல்"

## 9.2 நோக்கங்கள்

1. மீன்வள அறிவியல் சார்ந்த பல்வேறு பிரிவுகளில் தரமான தொழிற் கல்வியை வழங்குதல்
2. மீன்வள பட்டதாரிகளுக்கு சிறந்த உயர் கல்வி வாய்ப்புகளை உருவாக்குதல்
3. மீன்வள அறிவியலில் உள்ள முதன்மையான பிரிவுகளில் அதிநவீன தொழில்நுட்பங்களை உருவாக்குவதற்கு முறையான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.
4. மேம்படுத்தப்பட்ட மற்றும் முறையான மீன்வள விரிவாக்க சேவைகளை வழங்குதல்
5. தொழில் நுட்ப பரிமாற்றங்கள் செய்ய ஏதுவாக கல்வி மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு சிறந்த சுற்றுசூழல் மற்றும் வசதிகளை ஏற்படுத்துதல்

6. மீன்வளர்ப்போர், மீனவர், வேலையில்லா பட்டதாரிகள் மற்றும் தொழில் முனைவோர்களுக்கு மீன்வள இணை தொழிற் கல்வியை வழங்குதல்
7. தேசிய நீலப்புரட்சித் திட்டத்தின் மூலம் வருவாயினை இரட்டிப்பாக்க மீன்வளத்தில் மனித வளத்தேவை மற்றும் தொழில்நுட்பம் உருவாக்குதல்.

துணைவேந்தர், பதிவாளர், ஆராய்ச்சி இயக்குனர், விரிவாக்கக் கல்வி இயக்குனர், தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர், முதல்வர்(கல்வி), முதல்வர் (மாணவர் நலன்), நிதி அலுவலர் மற்றும் உடைமை அலுவலர் ஆகியோர் அலுவலகங்கள் நாகப்பட்டினத்தில் செயல்பட்டு வருகிறது.

தூத்துக்குடி வளாகத்தில் உள்ள மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், இந்தியாவின் இரண்டாவது மீன்வளக்கல்லூரியாக 1977 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்கல்லூரியின் மூலம் இளங்கலை, முதுகலை மற்றும் முனைவர் பட்டப்படிப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், 2012 ஆம் ஆண்டு பொன்னேரியில் நிறுவப்பட்ட மீன்வள தொழில்நுட்ப நிலையம், 2014–15 ஆம் ஆண்டு முதல் மீன்வள கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமாக மேம்படுத்தப்பட்டு, 63 மாணாக்கர்கள் 2017–18 ஆம் கல்வி ஆண்டில் சேர்க்கப்பட்டு,

இளங்கலை பட்டப்படிப்பு வழங்கப்பட்டு வருகிறது. நாகப்பட்டினத்தில் அமைந்துள்ள மற்றொரு மீன்வள தொழில்நுட்ப நிலையம், **2017–18** ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதல் மீன்வள பொறியியல் கல்லூரியாக மாற்றப்பட்டு, **23** மாணாக்கர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். வாணியஞ்சாவடியில் உள்ள மீன்வள உயிர்த்தொழில் நுட்ப நிலையத்தில் நான்காண்டு பி. டெக் (உயிர்த்தொழில் நுட்பம்) என்ற பட்டப்படிப்பு சுயநிதி கல்வி முறையில் வழங்கப்பட்டு வருகிறது. இக்கல்வியாண்டில் பல்கலைக்கழக கலந்தாய்வின் மூலம் **22** மாணாக்கர்கள் **2017–18**ம் ஆண்டு சேர்க்கப்பட்டுள்ளனர்.

### 9.3 கல்லூரிகள்/கல்வி நிலையங்கள்

#### 9.3.1 ஏற்கனவே உருவாக்கப்பட்ட கல்லூரிகள்/ கல்வி நிலையங்கள்

- மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி
- தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பொன்னேரி
- மீன்வளப் பொறியியல் கல்லூரி, நாகப்பட்டினம்

### 9.3.2 புதிதாக உருவாக்கப்பட்ட கல்லூரிகள்/கல்வி நிலையங்கள்

- டாக்டர் எம்.ஜி.ஆர். மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தலைஞாயிறு
- மீன்வள முதுநிலை பட்டமேற்படிப்பு நிலையம், வாணியஞ்சாவடி, சென்னை
- மீன்வள உயிர்த்தொழில் நுட்ப நிலையம், வாணியஞ்சாவடி, சென்னை
- தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழக வணிக பள்ளி (மீன்வளம்), வாணியஞ்சாவடி, சென்னை
- நீர்வாழ் உயிரின வளர்ப்புத் தொழில்நுட்ப இணைத்தொழிற்கல்வி நிலையம், முட்டுக்காடு, சென்னை
- மீன்வள இணைத்தொழிற் கல்வி நிலையம், மண்டபம்
- மீன்வள இணைத்தொழிற் கல்வி நிலையம், இராயபுரம், சென்னை

### 9.4 புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட பாடப்பிரிவுகள்

- பி.டெக் (உயிர்த்தொழில் நுட்பவியல்)
- முதுகலை மீன்வள அறிவியல் (மீன் மருந்தியல் மற்றும் நச்சியல்)
- முதுகலை மீன்வள அறிவியல் (மீன் மரபியல் மற்றும் இனப்பெருக்கம்)

### 9.5 பல்கலைக்கழகத்தின் முதல் வேளாண் அறிவியல் மையம்

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வந்த சிக்கலில் (நாகப்பட்டினம்) உள்ள வேளாண் அறிவியல் மையமானது (53 ஏக்கர்) 10 தொழில் நுட்ப அலுவலர்கள் மற்றும் 6 தொழில்நுட்பம் அல்லாத ஊழியர்களுடன் இப்பல்கலைக்கழகத்தின் கீழ் சமீபத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

### 9.6. தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் வளாகங்கள்

மீன்வளம் சார்ந்த பணிகளை சிறப்பாக செயல்படுத்திட தமிழகம் முழுவதும் நாற்பது வளாகங்கள் செயல்பட்டு வருகின்றன.

### 9.7. தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகள்

தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் ஆகிய செயல்பாடுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகமானது இளநிலை மற்றும் முதுநிலை படிப்புகளில் சேரும் மாணவர்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகளின் கல்வி உதவித்தொகை பெற்று கல்வி பயில்வதற்கு

உதவுகிறது. தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் கீழ் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வின் மூலம் முதுகலை மற்றும் முனைவர் பட்டப்படிப்பிற்கு சேர்க்கை பெறும் மாணவர்களுக்கு முறையே **4000** மற்றும் **5000** ரூபாய் உதவித் தொகை மாதந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது. மாணவர்களுக்கு சிறந்த வேலை வாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கில் மாணவர் வேலை வாய்ப்பு பிரிவு இப்பல்கலைகழகத்தில் இயங்கி வருகிறது.

- மீன் பதப்படுத்தும் தொழில் பூங்கா மற்றும் தொழில் முனைவோா் காப்பகமானது சுயதொழில் செய்யும் அமைப்பினர் மற்றும் இளைஞர்களின் நன்மைக்காக நிறுவப்பட்டுள்ளது.
- சென்னை, மாதவரத்தில் இந்திய அலங்கார மீன் வர்த்தகத்தை உருவாக்கும் பொருட்டு தேசிய வண்ண மீன் வானவில் பேரங்காடி தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தினால் நிறுவப்பட்டுள்ளது.
- ஜூன் மாதம் **2017**–ம் வருடம் **16** உதவி பேராசிரியர் பதவிகள் நிரப்பப்பட்டுள்ளது மற்றும் **3** உதவி பேராசிரியர்களுக்கு தன்னிலை உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

## 9.8 முக்கிய ஆராய்ச்சி சாதனைகள்/ தொழில்நுட்பங்கள்

பல்கலைக்கழகம் மற்றும் அதன் உறுப்பு நிலையங்களில், மேம்பட்ட ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்காக ஆராய்ச்சி நிதி வழங்கும் நிறுவனங்களிடம் இருந்து ரூ.20.06 கோடி பெறப்பட்டு சீரிய முறையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- சர்க்கரை ஆலைகளின் உபப்பொருட்களை பயன்படுத்தி இறால் வளர்ப்பின் உற்பத்தியை பெருக்குதல்
- இறால் உணவு தயாரிப்பில் மீன் தூளிற்கு மாற்றாக உயிர்கூழ்ம தூளை (Biofloc meal) பயன்படுத்தும் தொழில்நுட்பம்
- சுழல்நீர் தொடர் தொட்டிகளில் நாற்றங்கால் வெனாமி இறால் வளர்ப்பு தொழில்நுட்பம்
- விரிப்பு குளங்களில் ரோகு மீன் வளர்ப்பை மேம்படுத்துவதில் KemZyme™Aqua சேர்ப்பானின் பங்கு
- காய்கறிகளுடன் கிப்ட் திலேப்பியா மற்றும் கெளுத்தி மீன்களை வளர்க்கும் அக்வாபோனிக்ஸ் முறை

- தூண்டப்பட்ட இனப்பெருக்கம் மூலம் கறிமீன் குஞ்சு உற்பத்தி தொழில்நுட்பம் மற்றும் வளர்ப்பு தொழில்நுட்பம்
- கிப்ட் திலேப்பியா மீன்களுக்கு கோழி கழிவு துகள்களைக் கொண்டு குறைந்த விலையில் புரதம் நிறைந்த உணவு தயாரித்தல்
- பல்தொடர் பாலிமேரேஸ் சங்கிலி தொடர்வினை தொழில்நுட்பத்தின் மூலம் *என்டிரேசைடேசுன் ஹெறப்டோபினால்* தாக்கப்பட்ட இறால்களை கண்டறிதல்
- பல்தொடர் பாலிமேரேஸ் சங்கிலி தொடர்வினை தொழில்நுட்பம் மூலம் கடல் உணவுகளில் உள்ள பாக்டீரியா நோய்க்கிருமிகளின் தாக்கத்தை கண்டறிதல்
- பாலிமேரேஸ் சங்கிலி தொடர் – ஆர். எஃப். எல். பி குறியீடுகளை கொண்டு இறால் உணவின் உண்மைத் தன்மையை கண்டறிதல்

## 9.9 பிற பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

தமிழ்நாடு டாக்டர். ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம், **2017–18**ம் ஆண்டில் வெளிநாடு மற்றும் இந்திய பல்கலைக்கழகங்கள், தேசிய மீன்வள அமைப்புகள், தனியார் மீன் பண்ணையாளர்கள் மற்றும் மீன் தீவன

தயாரிப்பாளர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது.

**9.10 அறிவுரை வழங்குதல்/ சான்றளித்தல்/ கலந்தாலோசனை சேவைகள்**

இப்பல்கலைக்கழகம், கடல் உணவுப் பொருட்களுக்கு, தூத்துக்குடியிலுள்ள மீன் தர கண்காணிப்பு சான்றிதழ் மையத்தின் மூலமாக சான்றிதழ் அளித்து வருகின்றது.

சென்னை மாதவரத்திலுள்ள மாநில மீன் நோய் கண்டறியும் ஆய்வகம், மீன் பண்ணையாளர்களுக்கு சான்றிதழ் வழங்கும் சேவை மூலம் 2017–18ல் கனிசமான வருவாயை ஈட்டியுள்ளது. மேலும், மீன்களில் நோய் உண்டாக்கும் கிருமிகளை கண்டறியும் மற்றொரு மண்டல ஆய்வகம் தூத்துக்குடி மற்றும் நாகப்பட்டினத்தில் செயல்பட்டு வருகிறது.

இப்பல்கலைக்கழகத்தின் கல்லூரிகள் மற்றும் வெளிவளாகங்களில் நீர் வாழ் உயிரின வளர்ப்பு தரச்சோதனை ஆய்வகம் இயங்கி வருகிறது. பொன்னேரியில் உள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடமாடும் தரக்கட்டுப்பாடு ஆய்வகம் பண்ணைக்கு சென்று ஆய்வு மேற்கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 9.11 விரிவாக்கச் செயல்பாடுகள்

இப்பல்கலைகழகமானது விரிவாக்கப் பணிகளையும், பண்ணை தொழில்களுக்கான பயிற்சிகளையும் அளித்து வருகின்றது. மீன்வள அறிவியலில் ஏற்பட்டுள்ள நவீன தகவல்கள் குறித்த விழிப்புணர்வை மீன்வளர்ப்போரிடம் ஏற்படுத்தும் பொருட்டு கையேடுகள், பருவ இதழ்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் ஆகியவற்றை அச்சிட்டு வெளியிடுகிறது. கிராம மக்களிடையே மீன் வளர்ப்பு மற்றும் பராமரிப்பு குறித்த தகவல் பரிமாற்றத்தினை மேற்கொள்ள, கண்காட்சி, மக்கள் தொடர்பு முகாம், வானொலி உரை, தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒளிபரப்பு போன்றவற்றை தொடர் நடவடிக்கைகளாக மேற்கொண்டு வருகிறது. இப்பல்கலைக்கழகம், தொழில்நுட்பங்களை பரவலாக்கும் நோக்கோடு பல்வேறு பயிற்சிகளை தனியாகவும், மீன்வளத்துறை, தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மற்றும் இதர அரசு நிறுவனங்களுடனும் இணைந்து செயல்படுத்தி வருகிறது. இப்பல்கலைக்கழகத்தின் சிறப்பு நோக்கு திட்டமான “வண்ணமீன் வானவில் தொழில்நுட்ப பூங்கா (ARTP)”, 80 வண்ணமீன் பண்ணையாளர்கள்/உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் சென்னை மாதவரத்திலுள்ள பல்கலைக்கழகத்தின்

வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது இந்திய நாட்டில் முதல் முறையாகவும் முன்மாதிரியாகவும் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும், இப்பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வரும் நான்கு மாநில நீர்வாழ் உயிரின வளர்ப்பு தரப் பரிசோதனை ஆய்வகங்கள் மற்றும் இரண்டு நடமாடும் உயிரின வளர்ப்பு தரப் பரிசோதனை ஆய்வகங்கள் பண்ணையாளர்களின் தேவைகளுக்கேற்ப சேவைகளை அளித்து வருகிறது.

2017-18 ஆம் ஆண்டில், இப்பல்கலைக்கழகத்தின் மூலம் 182 தொழில் கல்வி மற்றும் தொழில் முனைவோருக்கான பயிற்சிகள் நடத்தப்பட்டன. இதில் மொத்தமாக 6,262 பயனாளிகள் பயிற்சியில் கலந்து கொண்டு பயன்பெற்றுள்ளனர்.

மீன்வளம் தொழில்நுட்பம் சார்ந்த 75க்கும் மேற்பட்ட மடிப்பிதழ்கள் / கையேடு / புத்தகம் பிரசுரம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. ‘மீன்வளச்சுடர்’ என்ற தமிழ் காலாண்டு இதழ் பல்கலைக்கழகத்தின் வாயிலாக வெளியிடப்பட்டு வருகிறது. இந்த இதழ் குறிப்பாக மீன்வளத் தொழில்நுட்பம், மீன்வளத்தில் தற்போதைய நிலை, மீன்வளர்ப்போரை மேம்படுத்தும் வகையில் மீன்வளம் சார்ந்த

திட்டங்கள், பண்ணையாளர்களின் வெற்றி கதைகள் போன்ற தொகுப்புகளை உள்ளடக்கியுள்ளது. இப்பல்கலைக்கழகத்தின் மூலம் ஆங்கிலத்தில் செய்திமடல் வெளியிடப்பட்டு வருகிறது.

## 9.12 எதிர்காலத் திட்டங்கள்

- நீர்த் தேவையினைக் குறைத்து வருவாயினை பெருக்க மறு சுழற்சி முறையில் கொடுவா மீன்வளர்ப்பு மேற்கொள்ளும் தொழில்நுட்ப பூங்கா உருவாக்குதல்
- ''கயலகம்'' – மீன் அங்காடிகள் உருவாக்கப்பட்டு தமிழகத்தின் மீன் வர்த்தகம் மற்றும் மதிப்பு கூட்டிய மீன் பொருட்கள் தயாரிப்பை அதிகப்படுத்துதல்
- சென்னை வாணியஞ்சாவடியில் உள்ள முதுகலைப் பட்டமேற்படிப்பு நிலையத்தில் மாநில மீன் தீவனத்தர சான்றிதழ் ஆய்வகம் அமைத்தல்
- தூத்துக்குடியில் உள்ள தருவைக்குளத்தில் மீன் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளோருக்கு மாற்று வருவாயினை ஏற்படுத்த ஒருங்கிணைந்த பன்னடுக்கு நீர்வாழ் உயிரின வளர்ப்பு தொழில்நுட்பம் உருவாக்குதல்
- மீன்வள தொழில்முனைவோர் பயன்பெறும் வகையில் மின்னணு சந்தை உருவாக்குதல்

- மீன்வள மேலாண்மை மற்றும் வாழ்வாதாரத்தை உயர்த்தக்கூடிய வகையில் மீன்வளத் தகவல்களை அளிக்கும் கைபேசி செயலி உருவாக்குதல்
- கடல் உணவுகளைக் கொண்டு ஊட்டச் சத்து மருந்துகளை உருவாக்குதல்

**9.13 புதிதாக ஒப்பளிக்கப்பட்டுள்ள திட்டங்கள் – 2017–18**

- இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் மீன்வளப் பயிற்சி மையம் ரூ. **450** இலட்சம் மதிப்பீட்டில் அமைத்தல்
- மீன்வளர்ப்போரின் திறன் மேம்பாட்டிற்காக மீன் வளர்ப்பு தொழில்நுட்ப பயிற்சி மற்றும் செயல்விளக்கம் ரூ. **100.534** இலட்சம் மதிப்பீட்டில் அளித்தல்
- மீன் பதப்படுத்தும் தொழில்நுட்ப பூங்கா மற்றும் தொழில்முனைவோர் காப்பகம் ரூ.**114.47** இலட்சம் மதிப்பீட்டில் அமைத்தல்
- சென்னை, மாதவரத்தில் இந்திய அலங்கார மீன் வர்த்தகத்தை ஊக்குவிக்கும் பொருட்டு தேசிய வண்ணமீன் வானவில் பேரங்காடி ரூ.**250** இலட்சம் மதிப்பீட்டில் அமைத்தல்

- மீன் எலும்பிலிருந்து எலும்பு தேய்தலை எதிர்க்கும் கொலாஜன் பெப்டைடுகள் ரூ.36.071 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்குதல்
- மன்னார் வளைகுடா கடலோர பகுதியில் பருவநிலை மாற்றத்தால் ஏற்பட்டுள்ள உயிர் பல்வகைத் தன்மை மாறுபாட்டினை ரூ.21 இலட்சம் மதிப்பீட்டில் மேலாண்மை மற்றும் மறுசீரமைப்பு செய்தல்
- கிப்ட் திலேப்பியா மீன் வளர்ப்பின் மூலம் மீன்வளர்ப்போரின் வாழ்வாதாரத்தை ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்துதல்
- திருச்சி மாவட்டத்தில் நன்னீர் அலங்கார சினை மீன் வங்கி ரூ.313.76 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்குதல்
- சென்னை முட்டுக்காட்டில் மீன்வளர்ப்பு தொழில்நுட்ப இணை தொழில்கல்வி நிலையம் ரூ.689.98 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்தல்

## 10. 2017-18 ஆம் ஆண்டில் மீன்வளத்துறையின் முக்கிய சாதனைகள்

### 10.1 மீனவர் நலன்

- தமிழ்நாடு அரசின் இடைவிடாத முயற்சி மற்றும் உறுதியான நடவடிக்கைகளின் பயனாக தமிழகத்தைச் சேர்ந்த 469

மீனவர்களும் அவர்களது **26** மீன்பிடி படகுகளும் இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு தமிழகம் அழைத்து வரப்பட்டனர்.

- ஈரான் (அயல்நாடு) சிறைகளில் இருந்து **45** மீனவர்கள் விடுவிக்கப்பட்டு தமிழ்நாடு திரும்பியுள்ளனர்.
- **2017–18**ஆம் ஆண்டில் **13** கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த **1,59,506** மீனவர் குடும்பங்களுக்கு மீன்பிடி தடைகால நிவாரணமாக ரூ.**5000/–** வீதம் ரூ.**79.75** கோடி வழங்கப்பட்டுள்ளது.
- **2017–18**ஆம் ஆண்டில் மீன்பிடிப்பு குறைந்த காலத்திற்கான சிறப்பு நிவாரணத் தொகை **1,39,045** மீனவ குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.**69.52** கோடி வழங்கப்பட்டுள்ளது.
- கடலில் மீன்பிடிக்கும் போது பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த /காணாமல் போன **61** மீனவர்களின் குடும்பங்களுக்கு தமிழக முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து மொத்தம் ரூ.**89** இலட்சம் நிவாரண நிதியாக வழங்கப்பட்டுள்ளது.
- வர்தா புயலில் பாதிக்கப்பட்ட திருவள்ளூர், சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தினை

மீட்டிடும் பொருட்டு ரூ.19.13 கோடி அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது.

- ரூ.1,600/– கோடி மதிப்பீட்டில், பாக் வளைகுடா பகுதியிலுள்ள 2000 இழுவலை படகுகளை ஆழ்கடல் மீன்பிடிப்பிற்கு மாற்றும் மிக முக்கியமான திட்டத்தினை மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் 27.07.2017 அன்று துவக்கிவைத்தார்கள்.
- 2017–18ஆம் ஆண்டில் பாக் வளைகுடா பகுதியிலுள்ள இழுவலை படகுகளை ஆழ்கடல் மீன்பிடி படகாக மாற்றிட, 500 ஆழ்கடல் தூண்டில் மற்றும் செவுள்வலை மூலம் சூரை மீன் படகுகளை கட்ட ஒரு படகிற்கு அதிகபட்ச மானிய உதவியாக ரூ.56 இலட்சம் (70% ) வழங்கிடும் பொருட்டு மொத்தம் ரூ.286 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது (மத்திய அரசு – ரூ.200 கோடி மற்றும் மாநில அரசு ரூ.86 கோடி).
- கொச்சின் கப்பல்கட்டும் தளம் மூலம் 16 படகுகள், நாகப்பட்டினம் உமா கப்பல் கட்டும் மற்றும் பழுது பார்க்கும் நிறுவனம் மூலம் 10 படகுகள், கொச்சியிலுள்ள மாஸ்டர் கப்பல் கட்டும் நிறுவனம் மூலம் 7 படகுகள் மற்றும் காஞ்சிபுரத்திலுள்ள லாக்கீட் என்ஜீனியரிங் நிறுவனத்தின் மூலம் 12 படகுகள் ஆக மொத்தம் 45 ஆழ்கடல்

மீன்பிடிபடகுகள் கட்டுவதற்கான முத்தரப்பு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- கம்பியில்லா தொலைத் தொடர்பு வசதி வழங்கும் திட்டத்தின் கீழ் 100 விழுக்காடு மானிய உதவியில் 5 வாட் கம்பியில்லா தொலை தொடர்பு கருவிகள் 15,004 எண்ணம் இயந்திரம் பொருத்தப்பட்ட படகுகளுக்கும், 75 விழுக்காடு மானிய விலையில் 25 வாட் கம்பியில்லா தொலை தொடர்பு கருவிகள் 2535 எண்ணம் மீன்பிடி விசைப்படகுகளுக்கும், ஆக மொத்தம் 17,539 எண்ணம் வழங்கப்பட்டு வருகிறது.
- இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 18 மீனவர்களின் படகுகள் இலங்கை கடற் பகுதியில் இலங்கை கடற்படையினரால் நீண்ட காலமாக பாதுகாப்பின்றி நிறுத்திவைக்கப்பட்டு மீட்க முடியாத அளவிற்கு சேதமுற்றன. இந்த மீனவர்களின் வறிய நிலை மற்றும் அவர்களது படகுகளை மீட்க இயலாத நிலையினைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு மீனவருக்கும் தலா ரூ.5 இலட்சம் வீதம் ஆக மொத்தம் ரூ.90 இலட்சம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து விடுவிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டு, அந்நிவாரணத் தொகை 19.04.2017 அன்று மீனவர்களுக்கு வழங்கப்பட்டது.

- விபத்தின் காரணமாக எண்ணெய் படலத்திற்கு காரணமான கப்பல்களின் காப்புறுதி நிறுவனங்கள் இடைக்கால நிவாரணமாக, சீரமைப்பிற்கான தொகை உட்பட ரூ.141 கோடி தமிழ்நாடு அரசு கணக்கில் இருப்பு செய்தது. அத்தொகை திருவள்ளூர், சென்னை மற்றும் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.
- தமிழ்நாட்டில் உள்ள பெருநகரம் மற்றும் நகரங்களில் உள்ள மீன் அங்காடிகளை நவீனப்படுத்திடும் பணி ரூ.14.25 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து, 12ஆம் வகுப்பு தேர்ச்சிபெற்ற மீனவ இளைஞர்களுக்கு மாற்று வாழ்வாதாரம் மற்றும் வேலை வாய்ப்பு பெற்றிடும் பொருட்டு, இந்திய கப்பற்படை மற்றும் இந்திய கடலோர காவற்படையில் வேலை வாய்ப்பு பெறுவதற்கான சிறப்பு பயிற்சிக்கென அரசு ரூ.1.04 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.
- தமிழ்நாடு அரசின் மீன்வளத்துறை மற்றும் ஆஸ்திரேலிய வணிகம் மற்றும் முதலீட்டுக் கழகத்திற்கிடையேயான

நீடித்த மீன்வள மேலாண்மைக்கான கூட்டு ஒப்பந்தம் 13.03.2018 அன்று மேற்கொள்ளப்பட்டது.

- 2017–18ஆம் ஆண்டில் தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகம் ரூ.10 கோடியினை இலாபமாக ஈட்டியுள்ளது.

**10.2 உட்கட்டமைப்பு வசதிகள்**

- ரூ.29.50 கோடி மதிப்பில் தேசிய வேளாண் வங்கியின் RIDF XXIII நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் 9 மீன்இறங்குதள மேம்பாட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- இராமநாதபுரம் மாவட்டம் மூக்கையூரில் ரூ.113.90 கோடி மதிப்பில் மீன்பிடி துறைமுகம் அமைக்கும் பணிக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 06.03.2017 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்களால் 11.07.2017 அன்று சட்டமன்றத்தில் அறிவிப்பு செய்ததன்படி, நபார்டு வங்கி நிதி (RIDF XXIII) ரூ.45 கோடி மற்றும் மத்திய அரசின் நிதி ரூ.25 கோடி ஆக மொத்தம் ரூ.70 கோடி மதிப்பீட்டில் இராமநாதபுரம் மாவட்டம் குந்துக்கல் கிராமத்தில் மீன்இறங்குதளம்

அமைக்கும் பணிக்கு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

- மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்களால் 11.07.2017 அன்று சட்டமன்றத்தில் அறிவிப்பு செய்ததன்படி, நாகப்பட்டினம் மாவட்டம் ஆரியநாட்டுத்தெரு கிராமத்தில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் ரூ.162 இலட்சம் செலவில் ஏலக்கூடம் மற்றும் வலை பின்னும் கூடாரம் கட்டுவதற்கு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.
- தேசிய வேளாண் வங்கி RIDF XXIII நிதி திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டம் குறும்பனையில் ரூ.11 கோடி மதிப்பீட்டில் மீன்இறங்குதளம் கட்டுவதற்கும், கடியபட்டினத்தில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் நேர்கல்சுவரினை வலுப்படுத்துவதற்கும் அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

**10.3 ‘‘ஓகி’’ புயலின் தாக்கத்தினை தணித்திட அரசால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள்**

- ‘‘ஓகி’’ புயலினால் வெளி மாநிலங்களில் கரைசேர்ந்த 217 மீன்பிடி படகுகளை திரும்ப அழைத்து வர தேவையான டீசல் எரியெண்ணெய் வழங்கவும், 1,754 மீனவர்களுக்கு

உணவுப் பொருட்கள் வழங்கவும் அரசு ரூ.2.20 கோடி ஒப்பளித்துள்ளது.

- "ஒகி" புயலினால் பாதிக்கப்பட்ட கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 30,756 மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு வாழ்வாதார உதவியாக குடும்பம் ஒன்றிற்கு ரூ.5000/– வீதம் ரூ.15.38 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- "ஓகி" புயலினால் காணாமல் போன கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 188 மீனவர்களின் குடும்பங்களுக்கு சிறப்பு வாழ்வாதார உதவியாக ரூ.5000/– வீதம் ரூ.9.40 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- "ஓகி" புயலின்போது இறந்த 27 மீனவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.20 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.5.40 கோடி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.
- "ஓகி" புயலின்போது காணாமல்போன 177 மீனவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.20 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.35.40 கோடி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.
- "ஓகி" புயலின் காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் சேதமுற்ற மீன்பிடி துறைமுகம் மற்றும் மீன் இறங்கு தளங்களை சீரமைக்க மாநில நிதியிலிருந்து அரசு ரூ.20 கோடி ஒப்பளித்துள்ளது.

## 11 2018-19 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு

2018-19 ஆம் ஆண்டிற்கு ரூ.1016.53 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ. **733.01** கோடி வருவாய் செலவினமாகவும் ரூ. 283.52 கோடி மூலதன செலவினமாகவும் இருக்கும்.

## 12 இலக்கினை அடைவதற்கான வழிமுறைகள்

நமது மீனவர்களின் பாதுகாப்பினை உறுதிசெய்யும் பொருட்டு நவீன பாதுகாப்பு மற்றும் தொலைத் தொடர்பு வசதிகளை அவர்களுக்கு வழங்கிடவும், இதுவரை பயன்படுத்தப்படாமல் உள்ள ஆழ்கடல் மீன்வள ஆதாரங்களை முறையாக பயன்படுத்திட ஏதுவாக, அழிவினை ஏற்படுத்தாத, நிலைத்த மீன்பிடி முறைகளை ஊக்குவிக்கவும், மீன்களை சுகாதாரமான முறையில் கையாண்டு பிடிக்கப்பட்ட மீன்களின் தரத்தினை உறுதி செய்வதன் மூலம் அதிக வருவாய் ஈட்டிட தமிழ்நாட்டின் கடலோர பகுதிகளில் குளிர்காப்பு சங்கிலி மற்றும் மீன்பிடிப்பிற்கு பிந்தைய தேவைகளுக்கான கடற்கரை சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் மற்றும் தமிழ்நாட்டு கடலோர பகுதிகளில் ஒருங்கிணைந்த மீன்பிடி

துறைமுகங்கள் அமைத்தல் போன்றவற்றிற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மீன்வளப்பிரிவில் மாறிவரும் சூழலுக்கு ஏற்றவாறு தகுந்த மீன்வள ஒழுங்குமுறைகளை திறனுடன் அமலாக்கம் செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுத்திடவும், மீன்பிடி துறைமுகம் மற்றும் மீன் இறங்கு தளங்கள் அவற்றின் மேம்பாட்டிற்கான சமுதாய அடிப்படையிலான மேலாண்மையினை மேற்கொள்ளுதல், மாநிலத்தின் மீன்வள ஆதாரங்களை பாதுகாப்பதற்கான பாதுகாப்பு நடைமுறைகளை செயல்படுத்துதல் மற்றும் பாரம்பரிய மீன்பிடி கலன்களை இயந்திரமயமாக்கிட சுற்றுச்சூழலுக்கு உகந்த மாசில்லாத தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல் போன்றவற்றுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மீனவர்களின் மீன்பிடி உடமைகளை பாதுகாத்திட சமூக பாதுகாப்பு திட்டங்களை மேம்படுத்துவதற்கும், மீனவர்களுக்கு மாற்று வாழ்வாதாரங்கள் அளித்திடவும், தொழில் முனைவோருக்கான மேம்பாடு, மீன்பிடித்தலுக்கு பிந்தைய திறன் மேம்பாடு மற்றும் மேலாண்மை செய்தல் ஆகியவற்றில் பயிற்சிகள் அளித்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாநிலத்தின் மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் தனியார் மீன் வளர்ப்போரை ஊக்குவித்து மீன் பண்ணைகளின் பரப்பினை அதிகரிப்பதன் மூலம் மீன் உற்பத்தியினை அதிகரிக்கவும், மாநிலத்தின் வண்ண மீன் உற்பத்தி மற்றும் மீன் காட்சியகம் அமைப்பதை பிரபலப்படுத்தி வண்ண மீன் வணிகத்தினை அதிகரித்திடவும் முயற்சிகள் எடுக்கப்படும்.

மாநிலத்தின் மீன்பிடிப்பு மற்றும் மீன்வளப் பிரிவில், வங்கி/ நிறுவனக் கடனுதவிகளை அளித்திட ஏதுவாக மீன் வளத்திற்கு நிதியுதவி அளித்திடும் நிறுவனங்களை அமைத்திட நடவடிக்கைகள் எடுத்திடவும், அதிக மதிப்புடைய மீன் பொருட்களின் ஏற்றுமதி சந்தையை விரிவுபடுத்தும் வாய்ப்பினை ஏற்படுத்திடவும், பல்துறை பல்நோக்கு திட்டங்கள் மூலம் வாய்ப்புகளை ஒருமுகப்படுத்தி, துறையின் மேம்பாட்டு செயல்பாடுகளை திறனுடன் செயல்படுத்திடவும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 13. நிறைவுரை

மாநிலத்தின் மீன்வளப் பிரிவின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அரசு அதிமுக்கியத்துவம் அளிக்கின்றது. நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை காத்திடவும்,

மீனவர் நலனுக்கான பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தவும் அரசு உயர் முக்கியத்துவம் அளித்து வருகிறது. மீன்வள உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தவும், ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு மற்றும் அவை சார்ந்த செயல்பாடுகளின் மூலம் ஊரக பொருளாதார வளர்ச்சியினை துரிதப்படுத்தவும், மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை மேம்படுத்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. மீனவர்களின் வாழ்வில் வளமையை கொண்டு வருவதற்காக, சுற்றுச் சூழலுக்குகந்த நீடித்த வளங்குன்றா மீன்வள மேம்பாட்டு கொள்கையினை பின்பற்றி திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்துவதன் மூலம் அரசு மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி எனும் குறிக்கோளை அடைய உதவும். எமது தலைவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்கு சிந்தனைகளின்படி வழிநடத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் வரும் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மீன்வளம் பன்மடங்கு வளர்ச்சி அடைந்திட அரசால் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

**D.ஜெயக்குமார்**
**மீன்வளம், பணியாளர் மற்றும்**
**நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர்**